# ஆத்மஜோதி



புல்லாங்குழல் கொண்டு வருவான்—அமுது
பொங்கித் ததும்பும் நற்கீதம் படிப்பான்.

மார்கழி - 1977

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மஜோதி

## ஓர் ஆத்மீக மாதவெளியீடு

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.
-சுத்தானந்தர்

ஜோதி 30 — பிங்கள ௵ மார்கழி ௴ — (15-12-77) உ சுடர்—2

## பொருளடக்கம்


| | |
|---|---|
| சிவபுராணத்தில் சில அடிகள் | — 49 |
| பக்தர்களின் பண்பு | — 50 |
| மார்கழி மாத நினைவுகள் | 51 |
| ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம் | — 64 |
| கடவுளைக் காணலாம் | — 66 |
| சபரிமலை ஐயப்ப சுவாமி | — 70 |
| தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே | — 75 |
| கதிர்காம மகிமை | — 82 |
| உனது விரோதியையும் நேசி | — 88 |
| காரைநகர் மணிவாசகர் விழாவில் ... | — 89 |



### ஆத்மஜோதி சந்தா விபரம்

| | | | | |
|---|---|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் வருடச் சந்தா | | | — | 10-00 ரூபா |
| வெளிநாடுகளுக்கு | ,, | ,, | — | 20-00 ,, |
| ஆயுள் சந்தா | | ,, | — | 250-00 ,, |
| தனிப்பிரதி | | ,, | — | 1-00 ,, |

ஆசிரியர்: நா. முத்தையா

## ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி. [போன்: 353]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணத்தில் சில அடிகள்

உய்ய என் உள்ளத்துள் ஓங்காரம் ஆய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

இந்த எட்டு அடிகளிலும் பல சிறந்த உண்மைகள் படிந்திருக்கின்றன. அவை யாவை எனக்காண்போம்.

நான் பிறவிப் பிணியிலிருந்து தப்பிப்பிழைக்கும்படி என் உள்ளத்திலே ஓங்கார வடிவமாக வந்து நின்றாய் நீ உண்மையான ஓங்காரமே உருவானவன்! குற்றமற்றவனே! காளையின் மேல் ஏறி ஊர்பவனே! வேதங்கள் எல்லாம் ஐயா! என்று உரத்துக் கூவி அழைக்கும்படி அவற்றிலே மூழ்கிப் பரவிக்கிடக்கும் நுண்ணிய பொருளாக இருக்கின்றவனே!

வெப்பமாக இருக்கின்றவனே! குளிர்ச்சியாக உள்ளவனே! தலைவனாக இருக்கும் குற்றமற்றவனே! பொய்யான இவ்வுலகப் பற்றுக்கள் எல்லாம் என் உள்ளத்தை விட்டு ஓடிப்போகும்படி எழுந்தருளி வந்து அருள்புரிந்தவனே! உண்மை அறிவாகி நின்று எனக்கு காட்சி தரும் பேரொளியே!

எனக்கு எத்தகைய தனியான அறிவும் இல்லை; நல்லவை, தியவற்றைக் காணும் பகுத்தறிவில்லை; இத்தகைய பகுத்தறிவற்றவர்கள் இவ்வுலகிலே இன்பம் நுகர முடியாது என்பர். ஆயினும் பகுத்தறிவற்ற நான் இன்பம் நுகரும்படி எனக்கு அருள் செய்த தலைவனே!

உன்னை யார் நினைக்கிறார்களோ, நம்புகிறார்களோ, வணங்குகிறார்களோ, அவர்களிடம் அஞ்ஞானத்துக்கு வேலை இல்லை. அறியாமை அவர்களை விட்டு ஒளியும். அறியாமை நீங்கினால் பகுத்தறிவு வளர்வது இயல்பு. இந்த இயல்பு உண்மையாகும்படி நீ என்னிடம் நல்லறிவாக நின்றாய்! அதனால் நான் அஞ்ஞானத்திலிருந்து விடுதலை பெற்றேன். மெய்ஞ்ஞானம் கைவரப்பெற்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்களின் பண்பு

"மனங்கரைந்து மலம் கெடுக்கும் வாசகம்'' என்று திருவாசகத்தைப் போற்றினார் சுந்தரம்பிள்ளை அவர்கள். உண்மையில் பக்தி இல்லாதவர்கள்கூடத் திருவாசகத்தைப் படித்தால் உள்ளம் உருகுவார்கள். அதில் அமைந்திருக்கும் தமிழ், உள்ளத்தை உருக்கும் கன்னித் தமிழ். படிக்கப்படிக்க இனிமைதரும் பழமையும் புதுமையும் கலந்த தமிழ். பக்தியில்லாவிட்டாலும் தமிழ் அன்புள்ளோர் அப்பாடல்களைப் பாராட்டாமல் இருக்கமாட்டார்கள்.

திருவாசக ஆசிரியர் மாணிக்கவாசகர், சிவபெருமானிடம் ஆழ்ந்த அன்புள்ளவர். கணவனிடம் மாறாத காதல் கொண்ட கற்புள்ள மங்கை போன்றவர். கற்புள்ள மங்கை ஒருத்தி தன் காதலனிடம் கொண்டிருக்கும் அன்பையும் மதிப்பையும் போலவே, மாணிக்கவாசகரும் சிவபெருமானிடம் உறுதியான அன்பும் மதிப்பும் வைத்திருந்தார். இந்த உண்மையை அவருடைய பாடல்களே காட்டுகின்றன.

உள்ளத்தில் உறுதி இருந்தால் பக்தி நிலைக்கும். உள்ளத்தில் உறுதியற்றவர்கள் பக்தி செய்வதெல்லாம் வெறும் நடிப்புத்தான். பக்தி உள்ளவர்கள் அன்புள்ளவர்களாய் இருப்பார்கள். யாரையும் வெறுக்கமாட்டார்கள். யார்மேலும் சீறி விழமாட்டார்கள். கோபம் அவர்களிடமிருந்து ஓடிப்போகும். கோபத்திற்கும் பக்திக்கும் ஜென்மப் பகை. கோபம் உள்ள இடத்திலே பக்திக்கு என்ன வேலை.

திருவாசகத்தில் மெய்யுணர்தல் என்னும் பகுதியிலே முதல் பாடலைப் படித்தால் பக்தியின் உணர்வு பிறக்கும்.

மெய்தான் அரும்பி விதிர்விதித்து
உன்விரையார் கழற்குஎன்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப்
போற்றி சயசய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன்
உடையாய் என்னைக் கண்டுகொள்ளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத நினைவுகள்

—ஆசிரியர்—

சேர்சிறுகாலை துயில்நீத் தெழுந்தருட் செல்வருடன்
நீர்துழைந்தாடி மலர்கொய்து சன்னிதிநின்று நின்றன்
பேர்பலபாடி வணங்குகின்றோம் எம்பிழை தவிர்க்க
மார்கழிமாதம் வருவாய் அம்மா ஞானமாணிக்கமே.

— அகத்தியர்;

''மாதங்களில் நான் மார்கழி'' என்று கண்ணன் கீதையிலே கூறுகின்றார். ''மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால் நீராடப்போதுவீர்'' என்பது ஆண்டாள் வாக்கு. மார்கழி மாதத்தைத் தேவர் மாதம் என்றே குறிப்பிடுவர். மிகப்பழைய காலம் தொட்டே மார்கழி மாதத்தை கடவுளை வழிபடுதற்கான சிறந்த மாதமாகக் கருதி வந்திருக்கிறார்கள். இறைவனை வழிபடவே இம்மாதம் ஒதுக்கப்படுவதால்தான் எவ்வித மங்கள நிகழ்ச்சிகளும் இம்மாதம் நடத்தப்படுவதில்லை.

ஒரு மனித வருடம் ஒரு தேவநாள். அத்தேவநாளின் பகற்காலம் உத்தராயணம் எனவும், இராக்காலம் தட்சணாயணம் எனவும் பெயர் பெறும். தை மாதம் முதல் ஆனி மாதம் முடிய உள்ள காலப்பகுதி உத்தராயணம் எனவும் ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் முடிய உள்ள காலப்பகுதி தட்சணாயணம் எனவும் கூறப்படும். மனிதர்களுக்கு ஒரு மாதம் தேவர்களுக்கு ஐந்து நாழிகை. எனவே சாதாரண இராக்காலத்தின் கடைசி முகூர்த்தம் எமக்கு விடியற்காலம். அது பிரம முகூர்த்தம் எனப்படும். அது போலத் தேவர்களுக்குப் பிரமமுகூர்த்தம் மார்கழி மாதமாகும். பிரம முகூர்த்தம் கடவுள் வழிபாட்டிற்கு ஏற்ற காலமாகும்.

மார்கழி மாதம் முழுவதும் மாதரும் ஆடவரும் விடிய ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டெழுந்து நித்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடன்களை முடித்துத் தத்தம் இல்லங்களைச் சுத்தி செய்து விட்டு, முற்றத்தின் நடுஇடத்தைச் சாணத்தினால் மெழுகிப் பச்சரிசி மாவினால் கோலமிட்டுச் சாணத்தினாற் பிள்ளையார் பிடித்து வைத்துப் பூக்களைச் சாத்தி, ''விக்கினேசுவரப் பெருமானே! எங்கள் இல்லங்களில் அசுர பூதபைசாசங்களால் விக்கினங்கள் நேராவண்ணம் காத்தருள வேண்டும்'' எனப்பிரார்த்தித்தல் முறை.

அவமிருத்துக்களினாலும் வேறு ஏதுக்களினாலும் இறந்து மலினம் அடைந்திருக்கும் பைசாசவடிவில் இருக்கும் உயிர்கள் தங்களுக்குத் தொடர்புடையார் வசிக்கும் வீடுகளில் செல்லும்போது விநாயகரின் காவலினால் வீட்டின் உட்புக முடியாது. எறும்பாகவும் பிறஊர்வனவாகவும் கோலமிட்ட அரிசிமாவை உண்டு மீள்கின்றன என்னுங் கொள்கை இருப்பதினாலேயே பச்சையரிசி மாவினால் கோலம் இட வேண்டும் என்பர். செங்கட்டி சுண்ணாம்பு முதலியவற்றினாற் கோலம் இடுவதால் பைசாச பாபம் உண்டாகுமென்றும், தரித்திரம் அதிகரிக்கும் என்றும் பெரியோர் கூறுகின்றனர். எந்த வீடு மெழுகிக் கோலம் இடப்படிருக்கின்றதோ அந்த வீட்டைத் தேவர்கள் அடைந்து ஆசீர்வாதம் செய்கின்றார்கள்.

இங்ஙனம் மார்கழி மாதம் முழுவதும் வைத்துப் பூசித்த விநாயக மூர்த்தங்களைத் தைப்பொங்கலுக்குப்பின் ஒரு தினம் ஒருங்கு வைத்து மோதகம் முதலியவற்றை நிவேதித்துப் பூசித்து இதற்கென இயற்றிய இரதத்தில் வைத்து மங்கல வாத்திய கோஷத்துடன் எழுந்தருளச் செய்து சமுத்திரத்திலேனும், ஆற்றிலேனும், குளத்திலேனும் சுத்த நீர் நிலையிலேனும் இடுதல் வேண்டும்.

மார்கழிப் பிள்ளையார் பிடித்து வைக்குங் கருமம்பெரும்பாலும் பெண்கள் கடமையே எனினும் ஆடவர்களும் அதற்கு உதவியாய் இருந்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவைப் பாடல்களை ஓதப் பெண்மணிகள் பத்தி சிரத்தையுடன் அதனைச் செய்துவரல் நன்று. மார்கழிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் பிடித்து வைத்துப் பூசிப்பதால், பிணி வறுமை என்பவற்றின் நீக்கமும், செல்வ விருத்தியும், மற்றும் பேறுகளும் உண்டாதல் பிரத்தியட்சம்.

## பாவை நோன்பு

மார்கழி மாதத்தில் மங்கையர் நோன்பினை மேற்கொள்வர். அதற்குப் பாவை நோன்பு என்பது பெயர். மார்கழி நோன்பென்றும் அதைக் கூறுவர். மணமான பெண்கள் இத்திங்களை மங்களத் திங்களாகக் கொண்டு நீராடி மகிழ்ந்து, நல்லறங்களைப் புரிவர். மணமாகாத கன்னிப் பெண்களோ இத்திங்களில் தாம் தாம் வழிபடு கடவுளரைத் தமக்கு நல்ல கணவரை நல்குமாறு வேண்டுவர். இந்நோன்பு தமிழ்நாட்டில் மிக்க பழங்காலந்தொட்டு நடைபெற்று வந்த ஒன்ருகும். சைவரும் வைணவரும் இவ்விழாவைக் கொண்டாடி வந்தனர் என்பது உறுதி. மணிவாசகர் பாடிய திருவெம்பாவையும் ஆண்டாள் பாடிய திருப்பாவையும் இவ்விழாவை வலியுறுத்துவன.

சேரநாடான கேரள தேசத்தில்,சகலகன்னிகைகளாலும் அநுஷ்டிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் விடியற்காலத்திற்கு முன்பே துயில் எழுந்து ஒவ்வொருவர் வீடாகச் சென்று தம் சகாக்களை எழுப்பி அழைத்துக்கொண்டு நீராடச் சென்றுஇறைவனை வழிபட்டு உதயத்திற்கு முன்பே வீடு திரும்புவர். இவ் விரதமே ஆண்டாள், மாணிக்கவாசகர் ஆகியோருடைய காலத்தில் சோழ,பாண்டிய நாடுகளிலும் அநுஷ்டிக்கப்பட்டுவந்தது. இதைத்தான் ஆண்டாள் தன் திருப்பாவையிலும் மாணிக்கவாசகர் தம் திருவெம்பாவையிலும் குறிப்பிட்டிருக்கிருர்கள். நல்ல மழை பெய்து, நாடு செழிக்கவும், நல்ல கணவர்களை அடையவும், மணமானவர்களுக்கு தங்கள் கணவன் தீர்க்காயுளுடன் இருக்கவும் இதைச் செய்வது வழக்கம்.

மார்கழி நீராடல் சங்க நூல்களில் தைந்நீராடல் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. துயில் எழுந்த பெண்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய பெண்களின் இல்லத்திற்குச் சென்று அவர்களைத் துயில் எழுப்புவது ஆண்டாள் திருப்பாவையிலும் மாணிக்கவாசகர் திருவெம்பாவையிலும் காணப்படும் ஒற்றுமையான அம்சம்.

பிங்கலந்தை என்ற நூலில் "பனிநீர் தோயலும், பாவை பாடலும்" என்று மார்கழி நீராட்டமும் பாவை நோன்பும் குறிப்பிடப்பட்டுள்ளன. கோகுலத்தில் மக்கள் மார்கழி மாதத்தில் விடியற்காலையில் நீராடிவிட்டு காத்தியாயினி பூஜை செய்ததாக மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது. குழந்தைகளுக்குப் பாட்டு, முதியவர்களுக்கு ஞானம், அன்பர்களுக்குப் பக்தி இவையெல்லாம் பொருத்தமாக திருப்பாவை, திருவெம்பாவையில் கலந்திருக்கின்றன.

பௌர்ணமியுடன் மிருக சீரிஷம் என்ற நட்சத்திரம் கலக்கும் நாளையே மார்க்க சீரிஷம் என்றும், மார்கழி என்றும் அழைக்கிறார்கள். கேசவ, நாராயண என்கிற விஷ்ணுவின் 12 நாமங்கள் 12 மாதங்களுக்கு வைக்கப் பட்டுள்ளன. இதில் கேசவ என்கிற முதல்நாமம் மார்கழிக்கு உரியது. கேசவன் அறிவு தரும் கடவுள். அதனால் இம்மாதம் மனிதனுக்குத் தூய அறிவுதரும் மாதமாக ஆகிறது.

இந்த மாதம் வெப்பம் தட்பம் சமமாக இருக்கும். பயிர்களுக்கும் மனிதர்களுக்கும் ஜீவாதாரமான ஜலம் கர்ப்பம் தரிக்கும் மாதம் இதுவே. பயிரில் நெற்பால் தோன்றி பழுக்க வைக்கும் பனிமூடப் பெய்யும் மாதம். மனிதன் உடல் வளர்ச்சிக்குத் தேவையான 'ஓஸோன்' என்கிற புதுக்காற்று அதிகாலையில் வீசும் மாதம். இந்தமார்கழியில் நீரில் உள்ளத்தையும் உடலையும்தூய்மைப்படுத்தும் ஒருவித வெப்பமானது நிலவும் என்றுமருத்துவநிபுணர்கள் கூறுகின்றனர். இம்மாதத்தை சிவபெருமானும். காத்யாயினியும் தத்தாத்திரேயரும் விரும்பி உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது திருவாதவூரர் என்னும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்துள்ள திருவாசகத்தில் அதன் நடுநாயகமாய்த் திகழும் ஒரு பகுதியாகும். ஒவ்வொரு பாடலும் 'ஏலோரெம்பாவாய்' என முடியும் இருபது பாடல்கள் கொண்டது. சைவ மரபினர் அனைவர் வீடுகளிலும் ஒவ்வோராண்டிலும் மார்கழி வைகறைப் பொழுதில் ஓதப்பெறுவது. சீயம் போன்ற அயல்நாடுகளிலும் ஓதப்பெறுவதும் திருவிழாக் கொண்டாடப்பெறுவதும் ஆகிய சிறப்புடையது.

சைவ மரபினர்க்குத் திருவெம்பாவைபோல வைணவ மரபினர்க்கு ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவை உரியது. சமண மரபினர்க்கும் 'பாவை' நூல் ஒன்று இருந்ததென 'யாப்பருங்கல விருத்தியுரையால் தெரிகின்றது. இப்பாவை நூல்களில் வரும் சொல்லாட்சி கருத்தாட்சி ஒப்புமைகொண்டு, வேறுபட்ட மரபினரை ஒன்றுபடுத்தும் நோக்கத்தோடே இவை எழுந்தன என்று கருத இடம் உண்டு.

சைவர் மரபில் இந்த நோன்பு மார்கழித் திங்களில் திருவாதிரைக்குப் பத்து நாட்களுக்கு முன் தொடங்கி திருவாதிரையன்று முடிவுபெறும். ஐந்தாம் வயது முதல் பன்னிரண்டாம் வயது ஈறுக உள்ள கன்னிப்பெண்கள் இந்த நோன்பிற் குரியவர். இவர்கள் ஒருவரை ஒருவர் துயிலுணர்த்த வைகறைப் பொழுதில் வீடுதோறும் செல்வர். அனைவரும் துயிலுணர்ந்தவுடன் ஒன்று சேர்ந்து நீர் நிலைக்குச் செல்வர்.

அம்மையப்பர் புகழ்பாடிக்கொண்டே நீராடுவர். பிறகு இறைவனுடைய சக்தி எனவும் திருவடி எனவும் சாத்திரங்கள் கூறும் இறைவன் திருவருளைக் கௌரி என்ற பெயரிட்டு, நுண்மணலால் அக்கௌரியின் உரு அமைத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபடுவர். இவ்வாறு பத்துநாட்கள் தொடர்ந்து வழிபடும் வழிபாட்டால் தாம் விரும்பும் நற்கணவரைப் பெறுவர். உலகுய்ய மழைபெறுவர்.

இறைவன் உயிர்த் தலைவன். சத்தினி பாதம் பெற்ற பக்குவம் உள்ள மக்கள் உயிர்கள் எல்லாம் கன்னிப் பெண்கள். அவை ஆணவ இருளிற் பிணிப்புண்டிருக்கும் நிலையே உறக்கம். மலத்தின் ஆற்றல் ஒழியப்பெறும் நிலையே துயிலுணர்ந்தெழுதல். மலபரி பாகமுடைய உயிர்களே முன்பாகத் துயிலுணர்ந்தெழும் கன்னிப் பெண்கள். மலபரிபாகம் எய்தாத உயிர்களை அவர்கள் உணர்த்தி மலபரி பாகப் படுத்தி எழச்செய்து, அன்புநெறி செலுத்தி இறையருளில் தோய்வித்தலே நீராடலும் நோன்பு நோற்றலும், ஆகும். நீராடி நோற்றுப் பெறும் பயன் ஆதிரை நாள் விழாவில் கூத்தப்பிரான் ஆடல் கண்டு களித்தலும், அவனுடைய திருவருளின் துணையால் ஆன்மநாயகனுகிய அவனோடு கலத்தலும் ஆகும். இதுபற்றியே கன்னிப்பெண்களே அன்றி மற்றப் பெண்டிரும் ஆண்களும் திருவெம்பாவையை ஓதும் நெறியைக் கடைப்பிடிப்பர்.

'சத்தியை வியந்தது' என்பது திருவெம்பாவைக்கு உள்ளுறை பொருள் என்று சான்றோர் கூறுவர். மனேன்மணி முதல் வாமை ஈருகக் கூறப்படும் நவசக்திகளும் உலகப் படைப்பின் நிமித்தம் முறையே முன்னது பின்னதைப் பிரேரித்து உணர்த்திய குறிப்பே திருவெம்பாவையின் முதல் எட்டுப் பாடல்களில் உள்ளதெனவும், இச் சத்திகளின் இயக்கத்தால் மாயை காரியப்பட்டுப் பிருதுவி முடிவான பிரபஞ்ச காரியம் நடைபெறுவதையே ஏனைய பாடல்கள் குறிக்கின்றன எனவும் கூறுவர்.

'ஏலோரெம்பாவாய்' என்பதில் ஏல் ஓர் என்பன அசைகள். எம்பாவாய் என்பது அம்பிகையாம் கௌரியை விளிக்கும் விளி. எனவே 'ஏலோரெம்பாவாய்' என்பது இன்னொலியோடு கௌரியை நினைவு படுத்தும் மந்திரமாகக் கொள்வதே பொருத்தமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவெம்பாவையில் முதல் எட்டுப் பாடல்கள், கன்னிப் பெண்கள் தம்முள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புதலை உணர்த்துவன. ஒன்பதாம் பாடல், தமக்குரிய நற்கணவர் இயல்புகூறி, அத்தகையவரைத் தமக்கு அருளவேண்டும் என்று வேண்டுதலை உணர்த்துவது. 10ஆம் பாடல், இறைவன் புகழ் அறுதியிட்டுக் கூறுந் தகையது அல்ல என உரைப்பது. 11ஆம் பாடல், பெண்கள் நீராடத் தொடங்குதலையும், இறைவன் தம்மை உடனிருந்து காக்க வேண்டுமென அவர்கள் வேண்டுதலையும் கூறுவது. 12ஆம் பாடல், பொய்கையிலே அன்றிச் சுனையிலும் நீராடுதலைக் காட்டுவது. 13ஆம் பாடல் பொய்கை அம்மையப்பராய்க் காட்சி அளித்தலைக் குறிப்பது. 14ஆம் பாடல், கௌரி நோன்பிற்கியையச் சோதி நிறம் கூறி, இறுதியில் சத்தியின் சிறந்த கருணைத் திறத்தை இயம்புவது. 15ஆம் பாடல், இறைவன் அருட்குணங்களில் ஈடுபடுவார்க்கு உண்டாகும் மெய்ப்பாடுகளை உணர்த்தி, அத்தகைய இறையன்பினைத் தாமும் பெற அவன் அருளுவான் என இயம்பிக் கன்னிப் பெண்கள் நீராடுதலைக் கூறுவது. 16ஆம் பாடல் உலகர் அனைவர்க்கும் பயன்படும் மழை வேண்டுதலைமொழிவது. 17ஆம் பாடல், தன்னை அடைந்து வழிபடும் அன்பர்க்கே அன்றி அன்பர் ஆயினோர் அனைவருக்கும் தானே சென்று அருளும் இறைவன் அருள் எளிமையை அறிவிப்பது. 18ஆம் பாடல், சூரியோதயத்தை உவமை நயந்தோன்றக் கூறி, இறைவன் இலக்கணங்களைச் சாத்திரக் கருத்திற் கியைய எடுத்தியம்புவது. 19ஆம் பாடல், பெண்கள் தங்கள் கற்புடைமைக்குரிய உறுதியான கொள்கைகளை எடுத்தோதி, அவற்றைத் தாங்கள் நன்கு கடைப்பிடித்தற்கு அவன் அருள் புரிய வேண்டும் என இரப்பதைக் கூறுவது. 20ஆம் பாடல், ஐந்தொழில் இயற்றும் இறைவன் இயல்பை உணர்த்தி அவன் திருவடியாம் கௌரி தம்மை ஆட்கொள்ளும் திறம் இயம்பி, மார்கழி நீராடலின் முடிவைக் கூறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரை நோன்பு

இது மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரம் கூடிய நிறைமதி நன்னாளில் மேற்கொள்ளப்படுவது. இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. அதனால் சிவ பெருமான் ஆதிரையின் முதல்வன் என்றும் ஆதிரையான் என்றும் கூறப்படுவான். மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று நடராஜப் பெருமானுக்குச் சிறப்புக்கள் நடை பெறும். அவற்றுள் தில்லையில் நடப்பது மிகச் சிறப்புடை யது. ஏராளமான மக்கள் ஆருத்திரா தரிசனம் செய் வதற்காகத் தில்லைக்குச் செல்வர். ஆருத்திரா என்பது ஆதிரை.

சங்கர சங்கிதை என்னும் சமஸ்கிருத நூல் ஏழுகாண் டங்களை உடையது. அதன் ஏழாம் காண்டம் உபதேச காண்டம் எனப்படும். அதில் திருவாதிரை விரதத்தின் மகிமை கூறப்பட்டுள்ளது. நடராஜர் தன்நடனத்தை பதஞ்சலிக்கும் வியாக்கிர பாதருக்கும் ஆடிக்காட்டியது இந்தத் திருவாதிரை நட்சத்திரத்தன்றுதான். நடராஜ ருடைய ஆட்டம் உலகம் இயங்குவதையே குறிக்கிறது. அணுக்கள் முதல் அண்டங்கள் வரை எல்லாம் ஒழுங்கு முறை தவறாது ஆடுகின்றன. இந்த நடனத்தில்தான் வேதங்கள், ஆகமங்கள், கீதங்கள், கலைகள்முதலான சகல மும் உதயமாகின்றன.

நம்மை எல்லாம் ஆட்டி வைக்கிறவன் தானும் ஆடிக் கொண்டிருக்கிறான். அவன் ஆடுவதால்தான் உலகம் ஆடிக்கொண்டிருக்கிறது. அவனுடைய அற்புதக் கூத்தே உலக சிருஷ்டி. இந்த நடனக் கோலத்தை பல பக்திமான் கள் பலவிதமாகக் கண்டு ஆனந்தித் திருக்கிறார்கள். திரு நாவுக்கரசர் கண்ட கோலத்தைக் கீழ்வரும் பாடல் விளக்கு கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமுங் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்தமாநிலத்தே!

நடராஜர் நடனத்தை திருமூலர், காரைக்காலம்மையார், கல்லாடர், கபிலர், பதஞ்சலி, வியாக்கிரபாதர் ஆகிய அடியார்கள் பலகோணங்களில் கண்டு பரவசமடைந் திருக்கின்றனர். திருமூலர் தான் இருந்த இடத்திலிருந்தே இதை அனுபவித்தார். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அன்பர்களே, ஈசன் திருநடனங்காணுங்கள் காணுங்கள் எனக்கூவி அழைக்கின்றார்.

கூற்றிருக்கும் மடலாழிக் குரிசின் முதலோர்
இறைஞ்சக் கொழுந்தேன் பில்கி
ஊற்றிருக்கும் தில்லைவனத் தசும்பிருக்கும்
பசும்பொன்மன்றத்து ஒருதாள் ஊன்றி
வண்டுபாடச் சுடர் மகுடமாப் பிறைத் துண்டமாடப்
புலித்தோலுமாடப் பகிரண்டமாடக் குலைந்து அகிலாடக்
கருங்கொண்டலோடும் குழற்கோதையோடும் கறைக்
கண்டனாடுந் திறன்காண்மினோ;

## திருப்பாவை

திருமாலடியார்களான ஆழ்வார்கள் பன்னிருவருள் ஆண்டாள் என்னும் பெண்மணியும் ஒருவர். அவருக்குக் கோதை என்றும், சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் பெயர்களுண்டு. கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த இவரியற்றிய பாமாலைகளுள் ஒன்று திருப்பாவை. இது முப்பது திருப்பாசுரங்களைக் கொண்டது.

நெய்யும் பாலுமுண்ணாராகி, நாட்காலே நீராடிக் கண்ணுக்கு மை எழுதாது, குழலுக்கு மலரிட்டு முடியாது, செய்யத்தகாதன செய்யாது, கோள்கூறாது, ஆந்தனை யும் ஐயமும் பிச்சையும் இட்டு, விரத நெறிநின்று தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனை, தூயோராய்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுது, வள்ளற் பெரும் பசுக்கள் நீங்காத செல்வமும் உலகுவாழப் பெய்திடும் மழையும் வேண்டிப் போயபிழையும் புகுதருவான் நின்றனவும், தீயினில் நூலாகும் வண்ணம் ஆயர் மகளிர் கோகுலத்தில் கண்ணனை அடைய நோற்ற நோன்பு என்று குறிப்பிடப்படுகின்றது.

திருப்பாவையில் கூறப்படும் பாவை நோன்பு சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் தைந்நீராடல் என்று பேசப்படுகின்றது. சந்திரனை அளவையாகக்கொண்டு மாதங்களை எண்ணிய மிகப்பழைய காலந்தொட்டே இந்நோன்பு முறையிருந்து வந்ததென்பது தைந்நீராடல் என்ற பெயரால் அறியப்படும்.

பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டுப் பெண்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதற்குத் திருப்பாவை ஒரு எடுத்துக்காட்டு. இந்நூலின் முதல் ஐந்து பாசுரங்களும் பாயிரம், செல்வம், செயல், குணங்களில் பத்து வகைப்பட்ட ஆயர்பாடிப் பெண்களை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞான விழிப்புக்குக் கொணர்வது இரண்டாம் பகுதி. அம்மகளிரை இறைவன் பணிக்குத் தகுதியுடையவராகச் செய்வது மூன்றும் பகுதி.

## வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் சுக்கிலபட்ச ஏகாதசிக்கு மோட்ச ஏகாதசி என்று பெயர். இதுவே வைகுண்ட ஏகாதசி என்றும் சொல்லப்படும். வைகுண்ட நாதன் திருமால். வைகுண்டம் அவர் இருப்பிடம். எல்லா ஏகாதசிகளும் விஷ்ணுவின் பூஜைக்குச் சிறந்ததாகக் கருதப்படினும், இந்த ஏகாதசிக்குச் சிறப்பாக விஷ்ணுவின் சம்பந்தம் கூறப்பெறுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. ஆகமங்களில் மகாவிஷ்ணுவின் மாத உற்சவங்கள் செய்ய விதித்திருக்கும் பஞ்ச பருவங்களில் ஏகாதசியும் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் பாஞ்ராத்திர ஆகமத்திலுள்ள ஈசுவர சங்கி தையில் மார்கழி மாதம் மகா விஷ்ணுவுக்கு அத்தியயன உற்சவம் நடத்தி அதில் தினந்தோறும் நைவேத்தியம் செய்த பிறகு, வைஷ்ணவர்களைக் கொண்டு தொன்மை பொருந்தியதும், தமிழில் அமைந்ததுமான நாலாயிரப் பிரபந்தம் கானம் செய்விக்க வேண்டும் என்று கூறி யிருப்பதாலும், வைகுண்ட ஏகாதசியை இடையில்வைத்து அதிலிருந்து பகலில் பத்து நாட்களும், அதற்கு முன் இர வில் பத்து நாட்களும் ஆக முறையே இருபது நாட்கள் அத்தியயன உற்சவம் நடத்தப் பெறும்.

இதன் மரபு ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் பகவானைச் சிம்மாசனத்தில் அமர்த்தித் தாம் இயற்றிய திருவாய் மொழி என்ற ஆயிரம் பாக்களை மார்கழி மாத ஏகாதசி முதல் பத்து நாட்களில் தினம் நூறுகக் கேட்கச் செய்து, பத்தாம் நாள் பரமன் திருவடி சேர்ந் தார். இதன் பின் ஆண்டு தோறும் அந்தத் தலத்தில் பகவானை சிம்மாசனத்தில் எழுந்தருளச் செய்து, எதிரில் நம்மாழ்வாரை எழுந்தருளப் பண்ணி, இருபுறமும் இருந்து கொண்டு அரையர்கள் திருவாய் மொழி ஓதப் பத்தாம் நாள் ஆழ்வாரைப் பரமன் திருவடியில் சேர்ப்பது சம் பிரதாயம். பின்னர் திருமங்கையாழ்வார் திருவரங்கத் தில் இவ்வுற்சவத்தை நடத்தி வைக்க விரும்பி, ஆழ்வார் திருநகரியிலிருந்து நம்மாழ்வாரின் விக்கிரகத்தை ஆண்டு தோறும் ஸ்ரீ ரங்கத்திற்குக் கொண்டு வந்து உற்சவம் நடத்திவந்தார்.

பிறகு இராமானுஜர் காலம்வரை இவ்வாறு நடந்து வந்தது. அவர் காலத்தில் ஆழ்வார் விக்கிரகத்தை ஸ்ரீரங் கம் கொணடுவருவது அபாயம் என்று தோன்றியதால், ஸ்ரீரங்கத்திலேயே ஆழ்வார் விக்கிரகம் அமைத்து, அதைக் கொண்டு உற்சவம் நடத்தி வரலாயினர். இவ்வாறே ஏகா தசிக்குமுன பதது நாட்களில் திருமங்கை மன்னன் திரு மொழி முதலிய மூவாயிரம் பாட்டுக்களையும் ஓதிமுடிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கு ஏற்பட்டது. கோயில் என்று சிறப்பாகக் கூறப் பெறும் திருவரங்கத்திலிருந்து இச்சம்பிரதாயம் மற்றக் கோயில்களுக்கும் பரவியது.

வைகுண்ட ஏகாதசிக்கு முதல் நாளிரவு, பகவான் அசுரர்களை மயக்க மோகனுவதாரம் எடுத்தது கொண்டாடப் பெறும். ஏகாதசியன்று சுவர்க்க வாசல் என்ற வாயில் புதிதாகத் திறக்கப்பெற்று, அதன் வழியே பரமன் திருஉருவம் எடுத்துச்செல்லப்பெற, மக்கள் உடன் சென்று வாயிலைக் கடந்து, பாவனையாகச் சுவர்க்கம் சேர்வர்.

காயத்திரிக்கு ஈடான மந்திரம் இல்லை. தாய்க்கு சமமான தெய்வம் இல்லை. காசிக்கு மேற்பட்ட தீர்த்தம் இல்லை; ஏகாதசிக்கு சமமான விரதம் இல்லை; என்று அக்கினி புராணம் கூறுகிறது. ''விரதம் உபவாசம் நியமம் இவற்ருல் உடல் கஷ்டத்தை அநுபவித்தல் கரும்பைக் கசக்கி அதன் சாற்றை உண்பது போல் இன்பம் உண்டாகும்'' என்று வியாசர் கூறுகிருர். ஏகாதசி அன்று நியமமாகச் சுத்த உபவாசம் இருப்பவனுக்கு ஒருவியாதியும் வ்ராது. இரண்டு வேளையும் உபவாசம் இருக்க இயலாதவர் ஒரு வேளையேனும் உண்ணுது இருத்தல் வேண்டும்.

ஏகாதசி என்பது ஒரு சக்தி. அவள் விஷ்ணுவின் திருமேனியில் விளங்குகிருள். அசுர சக்தியை அழிப்பது இந்த விஷ்ணு சக்திதான். இந்த சக்தி விஷ்ணுவிடம் கேட்ட வரம். ''ஏகாதசி அன்று தங்களை நினைத்து உண்மை மனத்துடனும், திடமான சித்தத்துடனும் விரதம் இருப்பவர்களை காத்தருள வேண்டும்.''

அன்றுமுதல் ஏகாதசி விரதத்தை எல்லோரும் கைக்கொண்டனர். முனிவர்களும் தபோதனர்களும் ''இது அவசியமான பகவானின் விருப்பம்; கட்டளை'' என்று நியமத்துடன் அதை ஏற்றுக்கொண்டனர். ஏகாதசி அன்று உபவாசம் இருப்பது, முழுநாளும் பட்டினியிருப்பது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வேளைகளிலும் ஸ்நானம், சுத்தமனத்துடன் ஜபம், கீர்த்தனம், ஹரியின் கதைகளைக் கேட்பது, படிப்பது, இரவெல்லாம் தூங்காமல் தெய்வ சிந்தனையில் தன்னை ஈடுபடுத்துவது, மறுநாள் காலையிலே ஹரிநாமத்தைச் சொல்லிக் கொண்டு துளசி தீர்த்தம் அருந்திய பின் உணவு ஏற்றுக்கொள்வது—இவைநியதியாகும்.

மனித ஜன்மத்திற்குத் தான் இத்தனை விரதங்களும் நோன்புகளும் வைக்கப்பட்டன. இந்த ஜன்மத்தை அடைந்தவன் தன் செய்கைகளால் உயரவும் உயரலாம்; தாழ்ந்து அழியவும் முடியும். தாழாமல் காப்பது என்பதால் தானம் என்றும், அவனைத் தரித்து இருக்கச் செய்வதால் தருமம் என்றும் அழைக்கப்பட்டன. வருடத்தில் வரும் இருபத்தைந்து ஏகாதசிகளிலும் வைகுண்ட ஏகாதசியே சிறப்புடையது.

## விநாயக சட்டி விரதம்

கார்த்திகை மாதத்துக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை தொடக்கம் மார்கழி மாதத்துச் சுக்கில பக்ஷச் சட்டியீறுக உள்ள இருபத்தொரு நாட்கள் இவ்விரதம் அநுட்டிக்கப்படுதல் முறையாகும். இவ்விரதம் அநுட்டிக்கும் போது ஆண்கள் இருபத்தோரிழையோடு கூடிய காப்பை வலக்கையிலும், பெண்கள் இடக் கையிலும் கட்டியவண்ணம் முதல் இருபது நாட்களும் ஒவ்வொரு பொழுதுண்டு, இறுதி நாளில் உப வாசம் இருத்தல் வேண்டும். வித்தியுன்மாலி என்னும் ஓரரசன் இதனை நோற்று வச்சிர யாக்கை பெற்றுத் திலோத்தமையை மணந்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தான். இருபத்தொரு நாட்களும் விநாயகர் புராணம் படிப்பதும் விநாயகர் திருவிளையாடல்களைப் பேசக்கேட்டலும் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம்

மொழி பெயர்ப்பு: காலஞ்சென்ற வித்தியாதரிசி
பிரம்மஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள்.
(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

அன்னே சாம்பவி பிறைமுடி அபலை
அபர்ணை பார்வதி உமையருட் காளி
மன்னி மாசல மகள சிவை கார்த்தியா
யனிமுக்கண்ணிநற் பயிரவி கருணை
துன்னு சாவித்திரி அழிவில் யவ்வனத்தாள்
சுபஞ்செய்வாள் நிறை பெருந்திரு அருள்வாள்
சின்மயீலருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

அன்னைமோகினி தேவிமுப்புவன
அகண்டரூபிணி பெருமகிழ் வளிப்பாள்
மன்னு நற்கலைவடிவினள் தளிர்க்கை
வயங்குவேய்ங்குழற் கானத்தின் விருப்பாள்
நன்னர்மங்கலை உடுபதி நிகரும்
நலங்கொளானனி புகைக்கணற் செருத்தாள்
சின்மயீயருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

அன்னை பொற்சிலம் பரதகை கடகம்
அங்கதம் குளிர் முத்தணி அணிவாள்
மன்னுசம்பகஞ் சாதிமென்மலர்கள்
மாலையாள்கழுத் தணியொளி திகழ்வாள்
துன்னு வீணையுங் குழலும்மிக்கணி செய்
தொடிக்கரத்தி வீராசனத திருப்பாள்
சின்ம யீயருட்பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

அன்னை ரௌத்திரி பத்திரகாளி
கைலை வைணவி யாரழல் முகத்தி
மன்னுநற்பிரம் மாணி மூப் புரங்காய்
வயிரி வானவர் வழுத்து செஞ்சோதி
தன்னை அண்டினர்ப் புரந்தருள் அம்மை
தக்கன் மாமகள் சாமுண்டி வலவை
சின்மயீயருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை சூலம்வில் அங்குசபாசம்
அடுத்தகையினள் பிறைமதி அணிவாள்
பொன்னும் வாணியும் போற்றிடுந் தகையாள்
வராகிமாமதுகைபடர்ச் செகுத்தாள்
சின்ன மாகமல் லாசுர மூகர்ச்
சிதைத்த நங்கையம் பிகைமகேச்சுவரி
சின்மயீயருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

அன்னை முத்தொழில் புரிபவள் மேலாம்
அணங்கு மிக்குயர்ந் தொளிர்தரு நிறத்தாள்
மன்னு காயத்ரி பிரவை அமுத
சாரபூரணி வழிபட ற் குரியாள்
தன்னை நேரிலோங் காரிதாழ் விந்தை
தனயற் காத்தவள் தைத்தியர்ச் செகுப்பாள்
சின்மயீயருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

அன்னை நித்தியை ஆகமமாதி
வழுத்த நின்றவள் ஆரியை தேவி
அன்ன வாகனன் முதலெறும் பீறும்
அனைத்து மீன்றவள் செகமயல் புரிவாள்
வன்ன பஞ்சகப் பிரணவமாதி
வகுத்த நாயகி மாலினி மனத்தாள்
சின்மயீயருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே

அன்னை அட்டகம் அனுதினம் அன்பின்
அகன்ற சிந்தையிற் படிக்குநல் லடியார்
அன்னைதன் கடைக்கண்ணரு ளேக்கும்
அடைவ ரிங்கழியாப்பெருந் திருவும்
அன்னைதூய மந்திரப் பெருந்துதியால்
அரன் சமீப மனனரும் அளிப்பாள்
சின்மயீயருட் பகவதி திருவார்
தேவி ராஜராஜேஸ்வரி பரையே.

*யாழ், நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி* **அம்பாள் கும்பாபி**
**ஷேக** *மலரில்* **இருந்து எடுக்கப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுளைக் காணலாம்

திருமதி. உமாதேவி பத்மநாபன்
அரியாங்குப்பம் —புதுவை.

"தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்." என்பது இறைவனைக் குறித்துத் தொன்று தொட்டு வழங்கி வரும் பொருள் நிறைந்த வாசகமாகும். ஏனெனில் இறைவன் ''அங்கிங்கெனாதபடி'' எங்கும் நிறைந்தவன். ஆண், பெண் என்ற பாகுபாடு அற்றவன். சாதி, மத, வேறுபாடு அற்றவன். அத்தகையவனைத்தான் நாம் நமது விருப்பப்படி, முன்னோர்களின் வழிமுறையை யொட்டி வழிபாடு செய்து வணங்கி வருகின்றோம்.

கடவுளுக்கு உருவ வேறுபாடு கிடையாது. அப்படியானால் சிவம், சக்தி என்றெல்லாம் ஆண், பெண் தெய்வங்கள் உள்ளனவே? அவர்களுக்குப் பிள்ளை, குட்டிகள் இருக்கிறார்களே என்று வினா எழுவது இயல்பு. அது இயற்கையும்கூட. ஆனால் அவை உண்மையல்ல. ஆதியில் மனிதன் ஒரே ஒரு இயற்கைப் பொருளைத்தான் தெய்வமாக வழிபட்டான். பிறகு தன்னை அச்சுறுத்தும் தன் சக்திக்கு கட்டுப்படாத இயற்கைப் பொருட்களையும் வழிபட ஆரம்பித்தான். ஒவ்வொன்றுக்கும் அதிபதியாகப் பல தேவதைகளை உருவகப் படுத்தினான். இவைகளுக்கும் மேலான ஒரு சக்தியை அதி தேவதையாக்கினான். பின்னர் தன்னைப்போலவே தெய்வங்களுக்கும் குடும்பம், குழந்தைகளை ஏற்படுத்தினான். இதனால் பல மதங்கள், மதத்தினர் தோன்றினர். இவைகளை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது.

பலமதத்தினரும், பல்வேறு தேவதைகளை வழிபடுபவரும் ஒரு உண்மையை உள்ளபடியே உணர்ந்துள்ளனர். அது, ''கடவுள் ஒருவரே'' என்பதுதான். எங்கெங்கோ, பிறந்து, எந்த, எந்த நாட்டின வழியாகவோ ஓடும் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையான ஆறுகள் எல்லாம் கடைசியில் கடலில்தான் ஒன்ருகக் கலக்கின்றன. மேற்குக் கடல் என்ரூே, கிழக்குக் கடல் என்ரூே, அட்லாண்டிக் மகா சமுத்திரம் என்ரூே, பசிபிக் பெருங்கடல் என்ரூே கடலுக்குப் பலவகைப்பெயர் கள் சூட்டப்பட்டாலும் கடல் ஒன்றுதான். அதனுல்தான் வள்ளலார் இறைவனை "பொங்கு பலசமயம் என்னும் நதிகள் எல்லாம், புகுந்து கலந்திட நிறைவாய்ப் பொங்கி ஓங்கும் கங்குகரை காணுத கடலே!" என்று பாடுகின்ருர். அது மட்டுமா! கருணைக் கடல், தனிப் பெருங்கடல், வற் ருத அன்புக் கடல் என்றெல்லாம் கூறுகின்ரூேம். நீர், தான் இருக்கும் மண்ணின் இயல்பை ஏற்பது. அதே போல் கடவுளும் மக்களின் மனப்பண்புக்கும், செயல் களுக்கும் ஏற்பமாறுபாடுள்ளவராக இருக்கின்ருர் என்று கூறலாம்.

கடவுளின் சக்தியையும், பெருமையையும் அளவிட்டுக் கூறமுடியாது, இயற்கைப் பொருட்கள், அவற்றிடையே காணப்படும் திட்டவட்டமான வரைமுறைகள், ஒழுங்கு கள், கட்டுப்பாடுகள் இவை, மனிதனுல் அமைக்கப்பட்ட அரசுகளில் ஒருபோதும் இருப்பதில்லை. அண்ட சராசரங் களையும், எண்ணற்ற கோள்களையும் படைத்த கடவுள், கட்டுப்பாட்டையும் விதித்திருக்கிருர் என்பதுதான் வியப் புக்குரியது. வானத்தில் வலம் வரும் சூரியன் சந்திரனோடு அல்லது மற்றையக் கிரகங்களுடன் மோதியிருக்கின்றதா? அல்லது உயிர்க்கூட்டங்கள், எங்களுக்கு இடவசதியில்லை என்று போரிடுகின்றதா? எதுவும் இல்லை. ஆனுல் மனித னுல் உருவாக்கப்பட்ட சமுதாயத்தில் இந்த விதிமுறை கள், கட்டுப்பாடுகள், சற்றேனும் பின்னம் அடையாமல் கையாளப்படுகின்றதா? என்பதுதான் சிந்தனைக்கு உரியது.

செய்தித்தாளைப் படிக்க எடுத்தால் என்ன காண் கிரூேம்? ரயில்கள் மோதல், காரும் சைக்கிளும் மோதிக் கொண்டன. நாட்டில் இனச்சண்டை, கோஷ்டிகள் மோதல், இரு நாடுகளிடையே போர், அல்லது பலவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்பு; இவைதான். போதாக் குறைக்கு விமானக் கடத்தல், அந்த கடத்தல், இந்தக் கடத்தல் என்று கடத்தல் விபரங்கள் வேறு. இவைகள் எதைச் சுட்டுகின்றன. மனித குலம் நாளுக்கு நாள் எப்படிச் சீரழிந்து வருகின்றது என்பதைத்தானே.

இந்த நிலை எதனால் ஏற்பட்டது? கடவுளை மறந்ததால் தானே. கடவுள் ஒப்பற்ற பரஞ்சுடர்தான். வானாக, நிலனாக, மதியாக, கதிராக, நீராக, நெருப்பாக, ஊனாக, உயிராக, அனைத்தும் எல்லாமுமாக விளங்குபவன் தான். ஆனால் அவன் ''காட்சிக்கு எளியன், அடியார்க்கும் அடியனாய்'' இருப்பவன். தன்னிடம் முழுமனதோடு சரணடைந்தவர்க்கு அபயம் அளித்துக் காப்பவன். பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டவன். பாணபத்திரனுக்காக விறகு சுமந்து இளைத்தவன். சாக்கியநாயனாருக்காகக் கல்லடிபட்டவன். இத்தகைய எளியனாய் இருக்கும்போது இறைவனை நாம் பற்றிக் கொள்ளாமல் அஞ்சி ஓடுவதும், ஒதுங்கி நிற்பதும் பெருந் தவறல்லவா?

வைகைக்கோ புனற்கங்கை வானதிக்கோ சொரிந்துகரை
செய்கைக்கென் றறியேமாற் றிருமுடி மண் சுமந்ததே
அரும்பிட்டுப் பச்சிலையிட் டாட்செய்யு மன்னையவ
டரும்பிட்டுப் பிட்டுண்டாய் தலையன்பிற் கட்டுண்டே.

என்று குமரகுருபரர் தமது மதுரைக் கலம்பகத்தில் மதுரைநாயகனின் எளிமையை மனங்கசிந்து பாடுகின்றார்.

முதலில் அவருடைய திருமுடி மண் சுமந்தது எதற்கோ? வைகை நதியின் உடைப்பை அடைக்கவா? அன்றி வானத்தினின்று இழிந்து ஐயனின் திருமுடியில் தங்கிப் பின் பகீரதனின் வேண்டுகோளுக்கு இணங்கி பூவுலகில் வந்த கங்கைக்கோ? எதற்கு இவர் கரைகட்டப் போகிறார் என்பதே தெரியவில்லையே என்று வினாத் தொடுப்பவர், பிறகு ஈசனின் செயல்களைக் கண்டுணர்ந்தவராய், நாள்தோறும் மணமிக்க அரும்புகளையும், பச்சிலைகளையும் சொரிந்து, திரிகரண சுத்தியுடன் வழிபடுபவளும், அன்னையைப் போல்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் இனிய பிட்டுணவைப் படைப்பவளுமாகிய வந்தி என்னும் மூதாட்டியின் தலைசிறந்த அன்பில் கட்டுப் பட்டே அவளுக்காக மண் சுமந்தது என்று கூறுகின்றார்.

அந்த கிழவி ஏழைதான். ஊதியம் கொடுக்க பணம் இல்லாதவள்தான். கூலியாக அவளால் தான் விற்கும் பிட்டைத்தான் தர இயலும். பிட்டைப் படைக்கும் துணி கூட புதியது அல்ல. பழையது. கரியது. அந்த கருந்துணி யில், வெண் பிட்டை வைத்துத் தருகின்றாள். அதுவும் சாழ்ப்புடன் அல்ல அன்னை போன்ற பரிவுடனும், அன்புட னும். அந்த அன்புக்கும், பரிவுக்கும் கட்டுப்பட்டே இறை வன் கூலியாளாக வந்து, அவள் கருந்துணியில் அன்புடன் இட்ட வெண்பிட்டைத் தமது வேத முரைத்த செம்பவள வாயிலிட்டுச் சுவைத்தார் என்றால் அவருடைய எளிமை யை என்னவென்று உரைப்பது.

இத்தகைய எளியனை நாமும் காணலாம். எங்கே? கோயிலிலா? திருவிழாவிலா? எங்கும் அவனைத் தேடவேண் டியதே இல்லை. நம்மனத்திலேயே அவனைக் காணலாம். சரி. எப்போது காண்பது? கொடிய தீவினைக்குக் காரண மான வஞ்சனை, கோபம், குரோதம், பொறாமை, இவை யெல்லாம் ஒழிந்தால் அவனைத் தரிசனம் செய்யலாம். அதாவது காமக் குரோதாதிகள் எனப்படும் அறுவகைத் துர்க்குணங்களும் ஒழிந்தால் காணலாம்.

மும்மைத் தமிழ்க்கூடல் மூலலிங்கத்து அங்கையர்கண்
அம்மைக்கு அமுதாம் அருமருந்தை—வெம்மைவினைக்
கள்ளத்திருக்கு ஒயிற் காணலாங் கண்டீர் நம்
உள்ளத் திருக்கோயி லுள்

என்று கூறுகிறார் குமரகுருபரர். முத்தமிழ் இசைக்கும் திரு ஆலவாயிலில் மூலலிங்கமாக விளங்கும் ஈசன் அழகிய மீன் போன்ற கண்களையுடையவளான மீனாட்சியம்மைக்கு அமு தமாக, அருமருந்தாக இருப்பவன். அவன் நமக்கும் இன் னருள் புரியக் கூடியவன். அத்தகையவனை நான்மாடக் கூடல் சென்றுதான் காணவேண்டும் என்பது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய உள்ளமாகிய திருக்கோயிலினுள்ளேயே காணலாம். நம்முடைய மனம் எப்போது தீவினைக்குக் காரணமான துர்க்குணங்களை யொழித்துப் பரிசுத்தமாக விளங்குகின்றதோ அப்போது உள்ளத் தாமரையில் வீற்றிருக்கும் கடவுளைக் காணலாம். கண்டு பெரும் பயன் எய்தலாம் என்கிறுர். அமிழ்தம் உண்டாரை வாழ்விக்க வல்லது. மூப்பையும், பிணியையும் போக்கக்கூடியது. அதுபோலவே இறைவனை யடைந்தவர்கள் பிறவாத, பேரின்ப நிலையையும், பிறவிப் பிணியையும் கடந்தவர்களாகிவிடுகின்றுர்கள். இருவினை நோயைத் தீர்க்கக்கூடிய அருமருந்தாகவும் இறைவன் இருக்கின்றுன். அப்படிப்பட்டவனை புகலடைந்து நம்முடைய துன்பங்களைக் களைவோமாக.

---

# சபரிமலை ஐயப்பசுவாமி

மாத்தளை அருணேசர்

திருவாங்கூரில் சபரிமலை என்னும் ஒரு மலை உண்டு. இது மணிமாலை என்னும் மலைகளினுள்ளிருக்கும் ராணிக் காட்டின் மத்தியில் 2000 அடி உயரத்தில் இருக்கிறது. இங்கு ஐயப்ப சுவாமியின் திருக்கோயில் அமைந்திருக்கிறது. இச்சபரிமலையானது இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் முக்கியமானது. இங்கு எருமேலி என்னுமிடத்தில் முஸ்லிம் பள்ளி ஒன்று இருப்பதால் முஸ்லிம்களுக்கும் இம்மலை முக்கியமானது.

இம்மலைக்குச் செல்ல இரண்டு வழிகள் இருக்கின்றன. குறுக்கே செல்வதென்றுல் இரு மலைகளினூடாக பத்துமைல் தூரம் காட்டில் நடக்கவேண்டும். வழக்கமாக எல்லோரும் செல்லும் வழி மலைகளின் வழியாக முப்பது மைல் தூர முடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஐயப்பனைத் தொழுவதற்காக யாத்திரை போகிறார்கள். சபரிமலை யாத்திரை மிகக் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு அடங்கினால்தான் செல்ல முடியும். யாத்திரீகர் கூட்டம் ஐயனுரைத் தவிர வேறொரு நினைவுமின்றிச் செல்வதால் வன விலங்குகளுக்குப் பயப்படுவதில்லை.

சபரிமலைக்கு யாத்திரை செல்பவர்கள் கார்த்திகை முதல் தேதியிலிருந்து 41 நாள் ஐயப்ப விரதம் இருப்பார்கள். மிகவும் மனக் கட்டுப்பாடாக ஆசாரத்துடன் நடந்து கொள்ள வேண்டும். குளிக்காமல் உணவருந்தக் கூடாது. சவரம் செய்து கொள்வது, பெண் கலவி ஆகியன கூடாது. எல்லோரையும் கடவுளர்களாகவும் சகோதரர்களாகவும் பாவிக்க வேண்டும். இம்மாதிரி 41 நாட்கள் இருப்பது அவசியம்.

முதல் முதல் மலைக்குச் செல்பவன் கன்னிஐயப்பன் என்றழைக்கப்படுவான். தலைவனை பெரியசாமி என்பர். மற்றோர்களை ஐயப்பன்மார்கள் என்று கூறுவர். பெரிய சாமியின் சொற்படி யாவரும் நடப்பார்கள். கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் பத்து பதினைந்து பேர் வரை இருப்பார்கள். இவர்கள் மலையை அடைய சுமார் மூன்று நாட்கள் பிடிக்கும். பனி அதிகமாக இருக்கும். கல்லும் முள்ளும் காட்டு விலங்குகளும் நிறைந்திருக்கும். காடு பல இடங்களில் ஏற்றமும் இறக்கமும் உள்ளதாயிருக்கும். இரவில் வழியில் திறந்த வெளியில்தான் படுக்க வேண்டும். அவரவர்களுக்குரிய உணவுப் பொருள்கள் பாத்திரங்கள் ஆகியவற்றை அவரவரே தூக்கிச் செல்லவேண்டும். இவ்வித கஷ்டங்களெல்லாம் இருந்தும் மகிழ்ச்சியாகவே ஆண்டுதோறும் பக்தர்கள் குறைவின்றிமலை ஏறிச் சென்று ஐயப்பனுரை வழிபடுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகரச்சங்கராந்திதான் இதற்கு முக்கியமான நாள். இங்கு ஐந்துநாள் தங்கி விழாவில் கலந்துகொண்டு பிறகு எல்லோரும் திரும்பிவிடுவார்கள்.

## ஐயப்பனின் வரலாறு

காலவ மகரிஷிக்கு லீலை என்ற ஒரு புதல்வி இருந்தாள். அவளை திரிமூர்த்திகளின் அமிசமான தத்தன் என்ற தேவனுக்கு அம்மகரிஷி மணஞ் செய்து வைத்தார். மணமக்கள் இருவரும் பலகாலம் நன்கு வாழ்ந்து காலங் கழித்தபின் தத்தன் தபம் செய்யப் புறப்பட்டார். இது லீலைக்குப் பிடிக்கவில்லை. அவரைத் தடுத்தாள். அதனால் கோபமடைந்த தத்தன் அவளை நோக்கி, "ஏ மகிஷி! (மனைவியே) நீ மகிஷி (பெண் எருமை)யாகவே மாறக்கடவாய் என்று சாபமிட்டார்.

சாபத்தின்படி லீலை, கரபன் என்ற அசுரனுக்கு மகளாக மகிஷம் என்ற எருமை உருவத்தோடு பிறந்தாள். பிறகு அவர்களுக்கு வேறொரு புதல்வனும் பிறந்தான். இருவருக்கும் முறையே மகிஷி, மகிஷன் எனப் பெயரிட்டான் அரசன். இந்த மகிஷாசுரனைத்தான் சண்டிகாதேவி கொன்றதாக தேவி மகாத்மியத்தில் கூறப்படுகிறது.

தன் சகோதரரின் அழிவைக்கேட்ட மகிஷி பிரமாவை யுத்தேசித்துத் தவம் செய்து ஒரு வரம் பெற்றாள். பரமசிவனும், மகாவிஷ்ணுவும் ஒன்று சேர்ந்து கலந்து உற்பத்தியான புதல்வன், பூமியில் ஒரு அரசனுக்கு பன்னிரண்டு ஆண்டு காலம் பணியாளனாக இருந்த பிறகுதான் என்னைக் கொல்லக் கூடிய தன்மையுடையவனாக வேண்டும் என்பதுவே அவ்வரம்.

பிரம வரத்தின் ஆற்றலால் மஹிஷி தேவர்களை அதிக துன்பப்படுத்தத் தொடங்கினாள். இதை அறிந்து விஷ்ணுவானவர் பிரமசிவ சக்தியால் ஓர் அழகிய மகிஷத்தைத் தோற்றுவித்தார். மகிஷியானவள் அந்த மகிஷத்தோடு பலகாலம் வாழ்ந்து வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சமயத்தில் பால்கடல் கடையப்பட்டு அதிலிருந்து வெளிவந்த அமிர்தத்தை மகாவிஷ்ணு மோகினி உருவங் கொண்டு அசுரர்களை மயக்கி ஏமாற்றி தேவர்களுக்குக் கொடுத்தார். இதையறிந்த பரமசிவன் மோகினியைக் கண்டு மோகமடைந்து அம் மோகினியுடன் கலந்தார். அந்த அரி அரர்களுக்கு ஒரு மகவு தோன்றியது. மார்கழி மாதமும் உத்தர நட்சத்திரமும் பஞ்சமி திதியும் விருச்சிக இலக்கினமும் கூடிய நன்னாளில் அம்மகவு அவதாரமாகியது.

அச்சிசுவுக்கு பிறக்கும் பொழுதே கழுத்தில் ஒருமணி இருந்தது. வேட்டைக்குச் சென்ற பந்தன நாட்டு அரசன் இக்குழந்தையை பம்பா நதிக்கரையில் கண்டான். அதனைத் தன் அரண்மனைக்குக் கொண்டுவந்து மணிகண்டன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தான்.

சரியான வயது வந்ததும் மணிகண்டனை ஒரு குருவினிடம் வித்தியாப்பியாசம் செய்ய அனுப்பினான் அரசன். ஓர் ஆண்டுக்குள் அவன் எல்லாக் கலைகளையும் கற்றுக் கொண்டான். குருவும் இவனை கடவுளின் அவதாரம் என எண்ணினார். குருடனாகவும் ஊமையனாகவும் இருந்த தனது குருவின் புதல்வனை மணிகண்டன் பார்வைதெரியவும் பேச்சுப் பேசவும் செய்துவைத்தான்.

பிறகு மணிகண்டன் நாட்டுக்குத் திரும்பி வந்ததும் அரசன் அவனுக்கு இளவரசுப் பட்டம் சூட்டினான். இது அந்த அரசனின் மந்திரிக்கு விருப்பமில்லை. அதனால் மணி கண்டனைக் கொல்லச் சதி செய்தான். ஒன்றினாலும் கொல்ல முடியவில்லை. கடைசியாக அரசியின் மூலம் மணி கண்டனைக் கொல்லத் துணிந்தான். அரசிக்கு தாங்கமுடியாத தலைவலி என்றும், அதைக் குணப்படுத்த புலிப்பால் வேண்டும் என்றும் கூறப்பட்டது. இதற்கு மணிகண்டன் அனுப்பப்பட்டான். இதற்குள் பன்னிரண்டு ஆண்டு கால வரையறையும் முடிவடைந்தது. காட்டில் சென்றதும் மணி கண்டனை தேவர்கள் அணுகி அவனிடம் பழைய மகிஷியின் வரத்தைப்பற்றிய விபரத்தைத் தெரிவித்தார்கள். இதற்குள் மகிஷமும் மகிஷியை விட்டு மறைந்து பரமசிவனை அடைந்துவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிஷியும் பழையபடி தேவர்களைத் துன்புறுத்தத் தொடங்கினாள். அன்றிரவே மணிகண்டனுக்கும் மகிஷிக்கும் சண்டை நடந்து மகிஷி கொல்லப்பட்டாள். அவள் உடனே சாபத்திலிருந்து விடுபட்டு பழைய உருவத்தை அடைந்தாள். இந்த மகிஷியே சபரிமலையிலுள்ள ''மஞ்சமாதா'' என அழைக்கப்படும் தெய்வம்.

பிறகு மணிகண்டன் ஒரு பெரிய சிங்கத்தின் மீதேறி பல பெண் புலிகளோடு பந்தன நகருக்குத் திரும்பினான். இதைக்கண்ட மக்கள் பயந்து வீட்டினுள் ஓடி ஒழிந்தனர். அரசன் இதனைக் கேள்வியுற்று வெளியே வந்தான். உடனே மணிகண்டன் அவனுக்கு வணக்கம் செலுத்தி தான் கொண்டுவந்துள்ள புலிப்பாலை அவனிடம் கொடுத்தார்.

இச்சமயத்தில் அவ்விடத்திற்கு அகஸ்திய முனிவர் வந்தார். அவர் மணிகண்டனின் பூர்வ வரலாற்றை அரசனிடம் தெரிவித்தார்.

மணிகண்டன் பந்தன அரசனிடம் தன் விருப்பத்தைக் கூறி அதன்படி செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதாவது:- "பம்பா நதியின் கிழக்கில் உள்ள நீலிமலையில் ஒரு கோயில் நிர்மாணித்துத் தன் உருவத்தை அதில் நிறுவி வைக்க வேண்டும்; தனது இடப்பாகத்தில் மஞ்சமாதாவுக்கும் கோயில் கட்ட வேண்டும். தனது கோயிலுக்குக்கிழக்குப் புறத்தில் பஞ்சேந்திரியங்கள் (5), அஷ்டராகங்கள் (8), திரிகுணங்கள் (3), வித்யா வித்யைகள் (2), ஆக 18 படிக்கட்டுகளை கட்ட வேண்டும். இப்படிகளைத் தாண்டி வருபவனுக்குத்தான் தன்னை அடைய முடியும்.

"ஆதியில் சபரி தபஞ் செய்த பெருமையுள்ள இடமாதலால் இதை சபரிமலை என அழைக்க வேண்டும். தன் பூதகணங்களின் தலைவனான வாபரனையும் நிறுவி வைக்க வேண்டும். தன்னைத் தரிசிக்க வருவோர் முழுமையான பிரமசரியத்தைக் கைக்கொள்ள வேண்டும்.''

இவ்வாறு தெரிவித்துவிட்டு அவர் அந்தர்த்தானமானார். அகஸ்திய முனிவரின் ஆஞ்ஞைப்படி கோயில் முதலிய நிர்மாணங்கள் நிர்மாணிக்கப்பட்டன. பந்தன அரசனும் தன் அரசாட்சியைத் தன் புதல்வனிடம் ஒப்புவித்துவிட்டு தபம் செய்யக் காட்டுக்குச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!

— முத்து —

தாள்+தலை என்ற இருசொற்கள் சேரும்போது தாடலை என்று ஆகி ஒருசொல்போல நிற்கின்றது. சொல்லால் இரண்டாயினும் பொருளால் ஒன்ருகி நிற்கும் இந்த நிலையை சிவனும் ஆத்மாவும் ஒன்றுசேரும் போது உண்டாகும் அத்துவித நிலைக்கு உதாரணமாகக் காட்டுவார் உமாபதி சிவாச்சாரியார். சிவமும் ஆத்மாவும் கலக்கின்றதாகிய பிரிக்க முடியாத அந்த இன்பக்கூடலே அத்துவித முத்தி எனப்படும்.

ஆன்மாக்கள் எல்லாம் பெண்கள். சிவன் ஒருவனே ஆண். ஆனபடியினுல்தான் இறைவனுக்குப் புருஷோத்தமன் என்ற பெயரும் ஏற்பட்டிருக்கிறது. பெண் ஒருத்தி ஆண்மகன் ஒருவனுடன் கூடி இன்பம் அடைதல் உலக இயற்கை நியதி. அதைமீறிப் பெண்ணெருத்தி இன்னெரு பெண்ணுடன் சேருவதால் இன்பத்தைப் பெறமாட்டாள். இங்ஙனமே சிவனுடன் சேரும் ஆன்மா பேரின்பப் பேற்றினை அனுபவிக்கும். அருளோடு சேரும் ஆன்மா அங்ஙனம் அனுபவிப்பதில்லை. ஆன்மாவைச் சிவத்துடன் சேர்த்து வைப்பது திருவருளே!

ஆறு கடலைச் சேர்ந்தபின் ஆறு என்ற பெயரைப் பெறுவதில்லை. கடல் என்ற பெயரையே பெறும். இறைவனை ஆத்மா சேர்ந்தபின் இருபொருள் அல்ல; ஒன்றேதான். பரம்பொருளைத் தவிர உலகில் வேறு ஒன்றுமே இல்லை.

மணப்பருவம் அடைந்த ஒரு பெண், வெளியிலே அதிகம் செல்லாத பெண், வீட்டோடு அடைந்து கிடக்கும் பெண், யாராவது புதிய ஆண்கள் வீட்டிற்கு வந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் கண்களிற்படாமல் ஓடி ஒதுங்கிக்கொள்ளுவாள். இக்காலத்திலே பெண்களும் ஆண்களும் அடிக்கடி சந்திக்கும் வாய்ப்புகள் உண்டு. அதனால் கூட்டி வைப்பாரின்றித் தாமே கூடிக்கொள்வார்கள். பெற்றோருக்கு விருப்பமில்லாவிட்டாலும் தாமே பதிவுத் திருமணம் செய்துகொண்டு வாழ்வார்கள்.

ஆனால் இப்பெண் யாரையும் மனதிலே கொள்ளாதவள். தாய் தந்தையர் தம்மகளுக்கேற்ற மணாளனைத்தேடி அலைவதை அவள் அறிவாள். யார் யாரோ வீட்டுக்கு வருவார்கள். தாயும் தந்தையும் சில சமயங்களில் இரகசியமாகப் பேசுவதும் இவள் காதுகளில் விழுவதுண்டு. பெரியவர்களுடைய கருமங்களிலே அவள் தலையிடுவதில்லை. ஆனால் தன்னைப் பற்றிப் பெற்றோர் கவலைப்படுவதை மாத்திரம் அறிவாள்.

ஒரு நாள் ஒரு நல்ல செய்தி அவள் காதில் விழுந்தது. ஒரு நல்ல இடத்தில் விவாகம் பொருந்தியிருக்கிறது என்பதுதான் அந்தச் செய்தி. அடுத்த வீட்டு மாமி மாப்பிள்ளையினுடைய பெயரைச் சொன்னாள். பெயரே அவளுக்கு நல்லாகப் பிடித்து விட்டது. மாமி மாமி அவர் எப்படி இருப்பார்? கறுப்பா? சிவப்பா? ஒல்லியா? மொத்தமா? நீங்கள் அவரை நேரில் கண்டீர்களா? உங்களுக்கு அவரைத் தெரியுமா? என்று கேள்விக்குமேல் கேள்வி போட்டுத் துளைத்துவிட்டாள்.

மாமி மாமி அவர் எந்த ஊர்க்காரராம்? ஊரின் பெயரைச் சொன்னதுமே அவளுக்கு ஊரின் பெயரே நன்கு பிடித்துக்கொண்டது. படத்தைப் பார்த்து தனக்கு வரப்போகிற கணவனுடைய குண நலன்கள் எல்லாவற்றையுமே அறிந்துகொண்டாள். தனக்கு வரப்போகிற கணவனுடைய பெயரை மற்றவர்கள் உச்சரிக்கும் போதெல்லாம் மனம் புளகாங்கிதம் அடைந்தாள். அவனுடைய ஊரின் பெயரைச் சொன்னாலே போதும் அவளுடைய உள்ளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்துணர்வு தோன்றிவிடும். ஆசை வெட்கம் அறியாது. என்பார்களே. அவன்மீது பைத்தியமே கொண்டுவிட்டாள்.

மாப்பிள்ளை பெண்பார்க்க வந்தார். எப்படியோ மாப்பிள்ளையைப் பார்த்துவிட்டாள். கருத்துக்கேற்ற கணவன் என்று களிகூர்ந்தாள். விவாகமும் நடந்தது. விவாகம் செய்த அன்றே அன்னையையும் தந்தையையும் விட்டுக் கணவனுடன் சென்றுவிட்டாள். இதுவரை திருமணம் ஆகவில்லையே என்று பெற்ருர் கவலைப்பட்ட மகள் தங்களைப் பிரிந்து செல்லுகின்ருளே என்று கவலைப்பட்டனர். உலக நியதியைக் கருதிப் பெற்ருர் ஆறுதல் அடைந்தனர்.

கணவனைக் கைப்பிடித்த உடனே எல்லாம் அவனே என்று உறுதி பூண்டாள். அன்னை தந்தையரை மாத்திரம் அல்ல. பக்கத்திலுள்ளாரோடு சேர்ந்து பழகிய பழக்கங்களையே மறந்துவிட்டாள். கணவனைத் தவிர வேறு எதுவும் அவள் உள்ளத்தில் இடம்பெறவில்லை. பெயரைக்கூட மறந்து விட்டாள். விவாகத்திற்கு முன்பு தந்தையின் பெயராலேயே தன்னை அழைத்து எழுதி வந்தவள் கணவனைக் கைப்பிடித்த உடனே கணவனுடைய பெயரையே வைத்துக்கொண்டாள்.

ஒரு பெண்ணுடைய தியாகம் இதுதான். பிறந்த இடத்தில் வேறு பெயரோடு இருந்தவள் புகுந்த இடத்தில் பெயர், உடல், பொருள், ஆவி எல்லாவற்றையுமே தியாகம் செய்து விடுகின்ருள். இத்தகைய தியாகத்தோடு தன் மனைவி வந்துள்ளாள் என்று சில கணவன்மார் சிந்திப்பதில்லை. கணவனே சரண் என்று அவன் என்ன செய்தாலும் பொறுத்துக் கொண்டு அவனுக்கே தன்னை ஆளாக்கி வாழுகின்ற வாழ்க்கை ஒரு பெண்ணிஞல் முடியுமே தவிர, வேறு யாரால் முடியும்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரை உலக நிகழ்ச்சியினைப் பார்த்தோம். இதனை ஆழ்ந்து சிந்திப்பவர் யாருமில்லை. அங்ஙனம் ஆழ்ந்து சிந்திப்பார்களேயானால், நினைத்த உடனேயே கலியாணப் பதிவை நீக்கிக்கொண்டு இன்னொருவனுடைய கையைப் பிடித்துக்கொண்டு செல்லும் பழக்கம் ஏற்படுமா? இதே இலௌகீக நிகழ்ச்சி ஆத்மீக நிலையில் எவ்வாறு பொருந்தியுள்ளது என்பதைப் பார்ப்போம்.

தலைவனை அடைய வேண்டுமென்ற தாகம் ஒரு ஜீவாத்மா. இலௌகீகத்தில் ஒரு பெண்ணையும் ஒரு பிள்ளையையும் அன்னை தந்தையரோ, கலியாணத் தரகரோ கூட்டி வைத்தல் போல ஆன்மாவாகிய பெண்ணை தலைவனாகிய இறைவனோடு சம்பந்தப்படுத்தி வைப்பவர்தான் குரு. அந்தக் குருமூலமாகத் திருவருளே ஆத்மாவை இறைவனோடு சேர்த்துவைக்கின்றது.

சீடனுடைய பக்குவ நிலை அறிந்து ஒருநாள் குரு உபதேசம் செய்தார். மந்திர உபதேசம் கிடைத்தது. அதுவே தலைவனாகிய இறைவனுடைய நாமமாகவும் அமைந்திருந்தது. பஞ்சாட்சரத்திற்கு ஒரு பெருமை உண்டு. அது மந்திரமாகவும் இறைவனுடைய திருப்பெயராகவும் அமைந்துள்ளது. ஆனபடியினால்தான் அதுவேதம் நான்கிலும் மெய்ப்பொருளாக விளங்கிக் கொண்டிருக்கின்றது. அந்த மெய்ப்பொருள்நாதன் நாமம் நமச்சிவாய என்பதாகும்; ஞானமாகவும். கல்வியாகவும், வித்தையாகவும், நாவினால் உயர்வாக உச்சரிக்கக் கூடியதாகவும், வாழ்க்கையில் நன்னெறியைக் காட்டக் கூடியதாகவும் அமைந்தது நமச்சிவாயமாகும்.

மந்திர உபதேசம் கிடைத்த உடனே அந்த மந்திரப் பொருளை குரு விளக்கம் செய்வார். ஒவ்வொரு மந்திரத்திற்கும் தியான சுலோகம் ஒன்று உண்டு. அதுவே மந்திரப் பொருளைத் தெளிவுபடுத்துவது. நமசிவாய மந்திரத்திற்குரிய தியான சுலோகம் பின்வருமாறு:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து திருமுகமே நிறங்கள் ஐந்தே ஐமூன்று திருக்கண்ணே
அத்தம்பத்தே வஞ்சமழுச் சூலமுடன் வாள் அபயம் லரதம்
வலப்பால் மற்றிடப்பால் துஞ்சனலும் அங்குசமும் அணிபாம்பும் தோலும்
உடனுண்டே இப்படி எம்பெருமானைக் காணலாமே.

உபதேச மந்திரமும் உபதேச மந்திரப் பொருளும் அறிந்த பின் அநுஷ்டானச் சாதனை செய்ய வேண்டியதுதானே முறை. அந்த இறைவன் பல ஊர்களிலும் பல தலங்களிலும் பலவித மூர்த்தமாக விளங்குகின்றான். எல்லா மூர்த்திகளிலும் எல்லாத் தலங்களிலும் இறைவன்தான் சாந்நித்தியமாக விளங்கினாலும் சிலருக்குச் சில தலங்களினுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே ஒருவித மயிர்க்கூச்செறிவு உண்டாவதைப் பார்க்கலாம்.

சுந்தரருக்கு அடிக்கடி எங்கிருந்தாலும் திருவாரூர் நினைவு எழுந்ததுபோல ஆன்மாவாகிய பெண்ணுக்கும் தன்னை ஆட்கொண்ட தலைவனது தலத்தைக் கேட்ட உடனேயே ஒரு பைத்திய நிலை ஏற்பட்டுவிடுகின்றது. எல்லாவற்றிலும் எங்கும் இறைவனைக் கண்டுகொண்டிருக்கின்ற ஒரு ஆனந்த நிலையே பைத்திய நிலை என்று கூறப்படும். சிவபெருமானே சுந்தரரால் ''பித்தா பிறைசூடி'' எனப் பாடப்பெற்றார். இறைவனும் ஒரு பித்தன்தான். ஒரு ஆத்மாவானது தன்னை நாடிவந்து கட்டுகளினின்று தன்னை விடுவித்துக் கொள்ளாதா? என்றொரு பித்துப்பிடித்துக் கொண்டே இறைவன் உலகம் முழுவதிலும் அலைகின்றான்.

ஜீவாத்மாவுக்கு எத்தனை பிறப்போ? அத்தனை பிறப்புக்களிலும் அன்னை எத்தனை? அப்பன் எத்தனையோ? யாரறிவார்? ஒவ்வொரு தாயும் குழந்தைகளுக்குத் தாயாகி இருப்பதோடு அமையாது முடிவில் தமக்கொருதாயைத் தேடிச் செல்வதே வழக்கமாகிவிட்டது. இதனைத் ''தாயத் தாய் கொண்டேகு மிவ்வுலகு'' என்று ஒரு புலவன் பாடி உள்ளான்.

குருவினுடைய உபதேசம் கிடைத்த உடனே முன்னைய ஆசார அனுட்டானங்கள் எல்லாம் தாமே நழுவிவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றன. அரிசி முளைக்கும்வரை உமியினுடைய பாதுகாப்பு அவசியமானதுபோல குருவினுடைய கிருபை கிடைக்கும் வரை ஆசார அனுட்டானங்கள் எல்லாமே தேவைதான். ஜீவன் முத்தநிலை அடைந்து விட்ட ஒருவனுக்கு இந்த ஆசார அநுட்டானங்களால் எவ்வித பயனும் இல்லை.

குருவினுடைய உபதேசத்தால் நான் என்ற அகங்காரம் அழிந்துவிடுகின்றது. நான்தானாகிறது. குருவினுடைய உபதேசம் கிடைத்த அன்றே பெற்றோர் இட்ட பெயரும் அழிந்துவிடுகின்றது. குருநாதன் வைத்த ஞானப்பெயரே நிலைத்து நிற்கிறது. கணவனைக் கைப்பிடித்து பெண்ணின் பெற்றூர் இட்டபெயர் மறைந்து கணவனுடைய பெயரே நிலைத்து விளங்குவதுபோல குருநாதனுடைய சம்பந்தத்தால் முன்னைய பெயரும் அழிந்து விடுகின்றது.

ஜீவாத்மாவின் தலை இறைவனுடைய தாள் சேர்தல் தாள்+தலை=தாடலை ஆகிறது. இதுவே அத்துவித முத்தி என்றும் பேசப்படுகின்றது. எமது பிறப்பின் நோக்கமும் இறைவனுடைய தாள் சேர்தலாகும். இதனைத் திருநாவுக்கரசருடைய தேவாரம் பின்வருமாறு கூறுகின்றது.

முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சியானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

இத்திருப்பாடல் திருவாரூர்ப் பெருமானது திருப்பெயரைக் கேட்ட உடனே தன்வசமழிந்த தலையன்புடையளாய தலைவி ஒருத்தியின் தன்மையை அவள் தோழி விளங்க உரைத்து செவிலிக்கு அறத்தொடு நின்றதாக வைத்துச் சத்திநிபாதத்து உத்தமர்களது நிலையை விளக்கியருளியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவருட் சத்தி ஆன்மாவிலே பதிதல் சத்திநி பாதம் எனப்படும். பகவான் ரமணமகரிஷி அவர்கள் சிறுவயதிலே எப்பொழுதோ யாரோ ஒருவர் அருணுசலம் என்ற பெயரைச் சொல்லக் கேட்டார். அப்பெயரைக் கேட்ட உடனேயே அவருடைய உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டு விட்டது. சில நாட்களில் அப்பெயர் குறிக்கும் அருணுசலனைத் தேடிப் புறப்பட்டு விட்டார். அப்பெண் கேட்ட நாமம் சிவன் என்பதாகும். சிவம் என்ற சொல்லுக்கு மங்களம், வசீகரித்தல் என்ற பொருள் உண்டு. இறைவனுடைய வண்ணம் பொன்வண்ணம் ஆகும். ஆரூர் என்பதற்கு எல்லாம் நிறைந்த ஊர் என்றும் பொருள் உண்டு.

தன்னை மறந்தமையாவது தலைவனையே நினையும் நினைவிலேயேதான் இது செய்கின்றமை என்பதை அறியா தொழிந்தமை. இறைவனை மறக்கிறோம். பொன்னை, மாதரை, மண்ணை மறந்துவிடலாம். தன்னை மறக்கிறதுதான் கடினம். ஆணவம் அற்ற நிலையிலேதான் தன்னை மறக்கக் கூடும். தாளைத் தலைப்பட்டமையாவது, தனக்கென ஒன்றின்றி அவன் வழியளாய் ஒழிந்தமை.

நாமங்கேட்டல், வண்ணங்கேட்டல், ஆரூர் கேட்டல், பிச்சியாதல் நான்கும் முறையே கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல் என்னும் நான்குமாகவும் அமையும். பின்னுல் கூறப்பட்டவை எல்லாம் அணைந்தோர் தன்மையைக் குறிக்கும். நாமம் பொதுவில் உணரப்படுவது. வண்ணம் சிறப்பாக ஆய்ந்து உணரப்படுவது. பித்து அதனில் அழுந்துதல்.

ஜீவாத்மாவின் தலை பரமாத்மாவின் தாளைப் பொருந்துதலே முத்தி அல்லது மோட்சம் எனப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காம மகிமை

— திருமதி. இராஜேஸ்வரி கணேசலிங்கம் —

(1) கந்தழி என்ற சொல்லையே உபயோகித்து கதிர்காமத்தில் முருகனிடம் கந்தழி தரிசனம் வேண்டுகிறார் சுவாமி நித்தியானந்த சரஸ்வதி:—

"கதிவேண்டும் நின் கருணை நிதிவேண்டும் கந்தழிக்
கடவுள் மணி காணவேண்டும்"........

(2) ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது கதிர்காமக்கீர்த்தனையில் முருகனைக் கந்தழியாகத் துதிக்கும் சொற்கள் தொடர்களோடு துதிக்கப்படுபவன் முருகனே என்பதைக் காட்ட முருகனுக்கே சிறப்பாக உரிய பெயர்களும் விரவி வருகின்றன.

பல்லவி

"நிருமலா பரமசிவ சண்முகா—சுத்த
நித்ய சத்ய வித்தகனும் குக (நிருமலா)

அனுபல்லவி

திருவுலாவும் இலங்கையில் மேவிய
சீர் திகழும் கதிர்காமத்துறைதரு
சிற்பரா அருள் தற்பரா—அன்பர்
சிந்தை உகந்தமருந் தனி வேலனே (நிருமலா)

சரணங்கள்

பரமனருளும் புதல்வா—பரமானந்தசிவ
பக்தர்க்கருளும் முதல்வா
கருணைசேர் சச்சிதானந்த வடிவே
கணிப்பிலாச் சதுர்மறையின் முடிவே
கந்தனே உமை மைந்தனே—எனைக்
காத்து மலஇருள் தீர்த்தருள் செய்குவாய் (நிருமலா)

(1) "கார்வளரும் உலக..." கதிர்காம வேலர் பதிகம்.
—சுவாமி நித்தியானந்த சரஸ்வதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுக்கறிவாய் நின்றவா க்ரௌஞ்சகிரியுடன்
அவுணர்கிளையைக் கொன்றவா
குறிகுணம் இறந்திலகும் முருகா
கூர்ந்துழாயணி திருமால் மருகா
கோலனே....

கீழே குறிப்பிட்ட தொடர்கள் கந்தழி நிலையைக் குறிப்பனவாக அமைந்தவை.

(3) "தற்பரஞ்சோதியே பூரணப்பிரமமே சதுமுகப் பிரமாதியோர்
சதுர்மறையும் அடிமுடிகள் காணுமலே தேடுசச்சிதானந்த சிவமே
அற்புதானந்த அருள் அமுதமலை மேகமே அநந்தகல்யாணகுணமாம்
அசண்டபரவெளியே என்னுயிர்க்குயிரே அருட்கருணை மேருகிரியே
சிற்பரம் தந்த சிந்தாமணிக்குவியலே செந்தேன் நெடுஞ்சலதியே
தெள்ளமுதமே ஜனனம் மாற்றுதற் கடியார்கள் தேடவரும் அருமருந்தே
கற்பகச் சோலையியே என்றடியனேன் உனைக் கவிமாரி சொரிய அருள்வாய்
கங்கை உமை பாலனே கதிர்காம வேலனே கந்தசுவாமிக் கடவுளே."

இந்தச் செய்யுள் முழுதும் கந்தழி வணக்கமாகவே பாடியிருக்கிறார்கள் தருமபுர ஆதீனம் 10வது குருமூர்த்தம் ஸ்ரீலஸ்ரீ சிவஞானதேசிக சுவாமிகள். "கங்கை உமை........ கடவுளே", என்ற கடைசி அடியின் பிற்பாதிதான் கதிர்காமத்தில் கந்தழியாய் நிற்கும் கந்தசுவாமி துதி இது என்பதைக் காட்டுகிறது. மற்றபடி நிஷ்கள பரசிவ வணக்கம் என்றே நினைக்கும்படியிருக்கிறது இச்செய்யுள். அ— கடவுளே! செய்யுளின் ஈற்றுச் சொல்லான "கடவுள்" என்பது கூட, கட+உள்= "(தத்துவம்)" கடந்த பொருள் = கந்தழி என்னும் பொருளுடையது என்பது இச்செய்யுளின் ஏனைய சொற்கள் தொடர்களுடன் சேர அச்சொல்லைப் பார்க்கும் போது தானே நினைவுக்கு வருகிறது! எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எல்லார் வாயிலும் புகுந்து புறப்பட்டுக் கடவுள் என்ற சொல் தன் ஆதிப் பொருளை இழந்து நிற்கிறது.

இப்படிச் சான்றுகள் இன்னும் மேலேமேலே அடுக்கிக் கொண்டே போகலாம். விரிவஞ்சி இருவேறு காரணங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்காக இன்னும் இருவேறு சான்றுகள் காட்டுவதுடன் நிறுத்திக் கொள்வோம். சில சிறப்புப் பெயர்களின் பிர யோகம் குறிப்பிடுதற்குரியது. முதலில் அதைப் பார்ப் போம்.

(4) சிற்றம்பலம், கனகசபை, சிற்சபை என்பன சிதம் பரத்துக்கே தனி உரிமையான சிறப்புப் பெயர்கள். வேறு எந்தத் தலத்துக்கும் இப்பெயர்களை வழங்குவது மரபு அல்ல.

''பற்றென்றிலாமையைப் பற்றினர் தங்களைப் பற்றி நிற்கும்
(1) சிற்றம்பலத்தொளிர் சேயே அறுவர் திரவியமே
பெற்றம்புயத்தருள் பேணிட என்றும் பெருமையொடு
முற்றுந் திருவருள் செய்வாய் கதிரை முழுமுதலே.''

என்று பரவி, கதிர்காமநாதனைச் ''சிற்றம்பலத்தொளிர் சேயே'' எனத் துதிக்கும் கவிஞர், கதிர்காம ரகசியத்தைச் சிற்றம்பலம்=சிறுமை+அம்பலம்=சூக்கும சபை=ஞானப் பரவெளியாகவும், கந்தசுவாமியை ஞானப் பரவெளியில் ஒளிரும் ஞானப்பரஒளி ஆகவும் கருதித் தியானித்தே வழிபடுகிறார்.

மேலும், மேலும், அம்புயத்து – (அடியேனது இருதய மாகிய) தாமரையில், பெற்று — (தேவரீரைத் தரிசிக்கும் பெரும் பேற்றை) அடைந்து, பெருமையோடு அருள்பேணிட —(திருவருள் கிடைக்கப்பெற்ற) இறுமாப்புடன், எப்போ தும் தேவரீரது திருவருள் வண்மையையே வாழ்த்தும்படி (எளியேனுக்கு) ''முற்றும் திருவருள் செய்வாய்,'' என்று கதிர்காமத்தில் முழுமுதற் பொருளாய் (=கந்தழியாய்) எழுந்தருளியிருக்கும் முருகனை வேண்டும் கவிஞர், ''விராட் (=உலகம் ஆகிய) புருடனது இதயமாகிய கதிர்காம ரகசி யத்திற்போல ஏழையேனது இருதய தாமரையிலும் எழுந் தருளிக் காட்சி தந்தருள வேண்டும்,'' என்று விண்ணப்பித் தலால், கதிர்காம ரகசியத்திற்கும் அன்பர்களது இருதய குகைக்கும் ஒப்புமையும் குறிப்பிடுகிறார்.

(1) செய்யுள் 20: கதிர்காமமாலை—
வண்ணை பண்டிதர் நெ. வை. செல்லையா அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களது கதிர்காமக் கீர்த்தனையில் வரும் ''அன்பர் சிந்தை உகந்த மருந்தனி வேலனே,'' என்னும் தொடரும் இக்குறிப்பினதே.

சிதம்பரம் என்பது சித்+அம்பரம்=அறிவு+ஆகாயம் =அறிவுப் பெருவெளி=ஞானப் பரவெளி எனப்பொருள் படும். இப்பெயர் விராட்புருடனது இருதயத்தானம் ஆகிய இரகசியத்துக்கு உரியது இது. இரகசியத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட கோவிலுக்குப் பெயராகிப், பின் கோவிலைச் சூழ அமைந்த ஊருக்குக் காரண இடுகுறிப் பெயராக வழங்குகின்றது. (1) "தெருளும்படி அறிவார் ஆர்? கதிரைச் சிதம்பரனே,'' என்ற கதிர்காமமாலைத் தொடரில் சிதம்பரம் என்ற பெயரின் ஆதி அர்த்தமே குறிக்கப்படுகிறது. ''கதிர்காமத்தில் இரகசியம்'' எனப்படும் ஞானப் பெருவெளியில் பர ஒளியாய் (=கந்தழியாய்) விளங்குபவனே,'' என்பது கதிரைச் சிதம்பரனே என்ற தொடரின் பொருள் ஆகும்.

(2) ''கனகசபை(2)கனைக் கண்டேன் காதல் தீர''
எனவும்,

(3) ''கற்பூர ஆலாத்தி ஏந்தி யானும்
கனகசபை தனில் நின்று போற்றி செய்தேன்''
எனவும்,

(4) ''சிற்சபையில் மாதர்கள் ஆலாத்தி ஏந்தச்
சிவகுருவே உன்பாதம் காட்டிப் பின்னர்
அற்புதமாய் வந்தென்னை ஆளவேண்டும்''
எனவும், (5) சிற்சபையில்

---

(2) செய்யுள் கதிர்காமமாலை
(3) செய்யுள் 32 கதிர்காமமாலை
(4) செய்யுள் 9 கதிரைமலைப் பதிகம்
(5) செய்யுள் 2 ,, ,,
} திருகோணமலை வைத்தியர் திரு. சி. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(5) "சிற்சபையில் மாதர்கள் சிறந்த ஆலாத்திகள் சிரா யெடுத்து நிற்க" எனவும் கதிர்காமத்தைக் கனக சபை என்றும் சிற்சபை என்றும் போற்றுகின்ற திருகோண மலை வைத்தியர் திரு. சி. ஆறுமுகம் பிள்ளை அவர்களும் கதிர்காம ரகசியத்தை நாதாந்தப் பெருவெளி ஆகவும் கதிர்காம நாதனை ஞானப் பெருவெளியில் ஒளிரும் ஆனந்த ஒளி (=கந்தழி) ஆகவும் தியானித்தே வழிபடு கின்றார்.

சங்கிரக வாக்கியத்திற் சொல்லப்பட்ட மூன்று நிலை களையும் சுட்டும் ஒரு தொடரை எடுத்துக் காட்டுவதோடு இந்தச் சான்றுப் பட்டியலை முடித்துக் கொள்ளலாம்.

அருணகிரிநாதர் அநுபூதிமான். கதிர்காம ரகசியத் தில் கந்தவேள் ஒளியாய், பரநாத தத்துவமாய் நாதா தீதமாய்த் தத்துவங் கடந்த சிவஞான சோதி (=கந்தழி) ஆகவும் விளங்குவதை தியானக் காட்சியாலன்றி ஞானக் கண்ணால் நேரில் கண்டு,

"நாத ஒளியே நற் குண சீலா
நாரி இருவோரைப் புணர்வேலா
சோதி சிவஞானக் குமரேசா
தோமில் கதிர்காமப் பெருமாளே."

என்று பாடிப் பணிகிறார்.

நாதம் இறைவனது அருவத் திருமேனி. சிவஞான சோதி இறைவனது நிர்க்குண (குணங்கடந்த) நிராலம்ப (=பற்றுக்கோடு அற்ற =கந்தழி ஆகிய) சொரூப நிலை. ஆக இத் தொடரில் சங்கிரக வாக்கியம் கூறும் மூன்று நிலைகளும் ஒருங்கே துதிக்கப்பட்டிருத்தல் காணலாம். இத் தொடரைக் கருத்தில் வைத்தே ஆராய்ச்சியுரை ஆசிரி யர் தமது சங்கிரக வாக்கியத்தை அமைத்தார் போலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையும் சாட்சிக்கு அழைக்கப்பட்ட இக் கவிஞர்களும், இன்னும் இவர்களைப் போலக் கதிர்காம நாதனைக் கந்தழி நிலையினராகத் துதிக்கும் மற்றையப் புலவர்களும் மதி நுட்பம் நூலோடு உடையவர்கள்; சமயநூற் கல்வியிலும் மிக்கவர்கள்; தியானப் பயிற்சியும் கைவந்தவர்கள்; இவர்களுட் பலர் இன்னும் மேம்பட்ட சிவநெறிச் சாதனை சித்தியும் உடையவர்களாக இருக்கலாம். அனைவரும் புலவர்கள். "ஆயிரத்தொன்றும் புலவர்.", என்பது ஆப்த வாக்கியம். ஆயிரத்தில் ஒருவர் கதிர்காம நாதனைக் கந்தழியாக வழி பட்டார் என்று காட்டினுற் போதுமா? மற்றத் தொளாயிரத்துத் தொண்ணூற்றென்பது பேர் விஷயம் என்ன?

இந்தப் புலவர்களும் இவர்களது கவிதைகளிற் சுட்டப்படும் ஐதிகங்களுக்கு உரிமை கொண்டாடுவோருங்கூட, ஆயுளில் ஒரு முறையோ சில முறையோ அல்லது மிஞ்சினுல் ஆண்டுக்கு ஒரு முறையோ அதிகபட்சம் நாலு முறையோ திருவிழாக்காண, இன்றேல் பிரார்த்தனை செலுத்த என்று கதிர்காம தரிசனத்துக்கு வந்து போகும் திருவிழாக் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள். கதிர்காமப் பிரதேசத்தில் நிலையாகக் குடியிருப்போர் வேடர்கள்; நிதமும் கதிர்காமநாதனை வழிபடுகிறவர்களும் இவர்களே. இந்த வேடர் விஷயம் என்ன? கதிர்காம நாதனுக்கு அணுக்க வழிபாடு செய்யும் உரிமை பூண்டகப்புறனை மாரும்கூட வேடர்தாமே! இந்த வேடரெல்லாம் கந்தழி வழிபாடு செய்யும் நுண்மதி உடையரோ? இல்லை எனில் கதிர்காமத்தில் நடைமுறையில் உள்ளது கந்தழி வழிபாடு எனக்கூறுவது எவ்வாறு பொருந்தும் என்று ஆட்சேபிப்பாரும் உளர். இந்த விஷயத்தையும் சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிராமதாஸ் அருளுரைகள் - 12

# "உனது விரோதியையும் நேசி"

தமிழாக்கம்: ம. சி சிதம்பரப்பிள்ளை

இது நடந்தது 1587-ம் ஆண்டு. இந்தியாவில் சிப்பாய்க்குள் குழப்பம் மூண்ட காலம். இந்திய சிப்பாய்கள் பிரிட்டிஷ் அரசுக் கெதிராக எழுந்த போது அந்த அரசு கெடுபிடியோடு ஒடுக்கியடக்க நடவடிக்கை எடுத்தது. இதனுடைய எதிரொலி—பொதுமக்கள் இலியடைந்து தங்கள் கிராமங்களை விட்டொழிந்து ஓடினர். ஒரு இடத்தில் இவ்வாறு ஓடி வரும் மார்க்கத்தில் சாது ஒருவர் கைவிட்டு வந்த கிராமத்தை நோக்இச் செல்வதனைக் கண்டனர். உடனே சாதுவை நோக்கி "அதிவிரைவில் ஆங்கிலேயப் படையினர் வருவார்கள். அவர்கள் இரக்கமில்லாது கொலை புரிவார்கள்." என்று எச்சரிக்கை செய்தனர். இவர்களது எச்சரிக்கைக்குச் சாது செவி சாய்க்காது கிராமத்தை நோக்கிச் சென்றார். கிராமத்தை அண்மியதும் பிரித்தானிய போர் வீரன் ஒருவன் பிராணபயமான முறையில் கத்தியால் சாதுவின் உடலில் குத்திவிட்டான். சாது நிலத்தில் விழுந்து மரண வாயிலை அணைக்கலானார். சாது உண்மையாக மரணித்து விட்டாரா என்பதனை அறிவதற்குக் கீழே குனிந்தான். சாது தனது கடைசி மூச்சு விடுமுன், தனக்கு ஆபத்து விளைத்த கன்னெஞ்சனாகிய ராணுவ வீரனைப் புன் சிரிப்புடன் நோக்கி, "நீயும் இறைவனே" என்று கூறினார்.

மரண உபாதையிலும் சாது போர் வீரனிலும் இறைவனைக் கண்டு தரிசிக்கலானார். எவ்வளவு மகிமையுள்ள பிரதிபலிப்பு இவருக்கு! எல்லாவற்றிலும் இறைவனைக் காண்பவனுக்கு இவ்விதமான பிரதிபலிப்புத் தோன்றுவது சர்வ சாதாரணம்.

*மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!*
*எங்கும் இன்பமே சூழ்க!*

* அடுத்த இதழில்: யாத்திரையின் உண்மைப் பொருள் – (ஆ:ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காரைநகர் மணிவாசகர் விழாவில்

# தலைமைப்பேருரை

கு. சுந்தரமூர்த்தி எம். ஏ., அவர்கள்

தமிழ்மொழி தொன்மையும் சிறப்பும் உடையது. பழைமையான இலக்கண இலக்கியங்களையும் உடையது. மனித வாழ்விற்கு அடிப்படையான ஒழுக்கத்தையும், சமய உணர்வையும், இருகண்ணெனப் போற்றி வளர்த்த பெருமையுடையது. நம் சமய நூல்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். ஒன்று தோத்திரம், இரண்டு சாத்திரம், மூன்று புராணம்., தோத்திர நூல்களுள் திருமுறைகள் சிறப்பாகக் குறிக்கத்தக்கனவாகும். திருமுறைகள் அருளியவர்களில் ஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மணிவாசகர் ஆகிய நால்வரையும் சமய குரவர் என அழைப்பர்.

இவர்கள் நால்வரும் இன்றேல் நம் சைவ சமயம் இத்துணைக் கட்டுக்கோப்புடனும், பொலிவுடனும், வளர்ந்திருக்க இயலாது என்பது ஒருதலை. இந்நால்வரும், இறைவன் எழுந்தருளியிருக்கும் இடங்கள் தோறும் சென்று தமிழோடு இசைபாடி, சமயத்தையும், சமுதாயத்தையும் வளர்த்தவர்கள் ஆவர். முத்தமிழுள், இயற்றமிழ் நீங்கலாக ஏனைய இரு தமிழும் காமத்தை விளைவிக்கும் எனக் கூறிய கருத்தை மறுத்து இறையுணர்விலே திளைப்பதற்கு இசையும், நாடகமும் பெருந் துணையாகும் எனக் கூறிய பெருமை இவர்களையே சாரும். இறைவனை வழிபடுதற்குரிய மந்திரம் ஐந்தெழுத்தாலாயது. இதனைப் பஞ்சாட்சரம் என்பர். அதைப் போன்றே இந் நால்வருடைய திருப்பெயர்களும் திருவைந்தெழுத்தெனக் கருதப்பெறும் பெருமையுடையது. ஞானசம்பந்தர், நாவுக்கரசர், நம்பியாரூரர், மணிவாசகர் என்னும் திருப்பெயர்களுள் மெய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழுத்தை நீக்கின் ஒவ்வொன்றும் திருவைந்தெழுத்தாகும். இவற்றைப் பக்த பஞ்சாட்சரம் என்று கூறுவர். இந்நால்வரும் அருளிய திருமுறைகளே முதல் எட்டுத் திருமுறைகளாகும். இவற்றுள் எட்டாம் திருமுறை இத்திருவாதிரை விழாவில் பெரிதும் சிந்தித்தற்கு உரியதாகும்.

திருவை அடையும் முறையைக் கூறுவது திருமுறையாகும். ஈண்டுத்திரு என்பது செல்வம், இலக்குமி, பெருமைக்குரிய சொல் எனப்படும் முறையில் வந்ததன்று. ''சிவமே பெறும் திரு எய்திற்றிலேன்'' என்பது திருவாசகம். எனவே, சிவத்தைப் பெறும் திரு எதுவோ அல்லது சிவமாகிய திரு எதுவோ அதுவே திரு என்பதன் பொருளாகும். திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறை எனப்படும். இத்திருமுறை நமச்சிவாய வாழ்க எனத் தொடங்குகிறது. திருக்கோவையாரின் இறுதிப்பாடல் "உயிர்க்கு ஊதியமே'' என நிறைவு பெறுகிறது. இவ்விரு குறிப்பையும் இணைத்துக் காணின் உயிர்பெற வேண்டிய ஊதியம் திருவைந்தெழுத்தேயாகும் என்பது விளங்கும்.

திருவாசகத்தின் உயிர்ப்பு நன்றியுணர்வேயாகும். இறைவன் நரியைப் பரியாக்கி ஞாலமெல்லாம் நிகழ்வித்துப் பெரியதென்னன் மதுரை யெல்லாம் பிச்சது ஏற்றிய பெருந்தகைமையை அடிகள், விழைந்தும், இழைந்தும், குழைந்தும் உருகிய பாடல்களே திருவாசகமாகும். திருவாசகம் பயிலுந்தோறும் பயிலுந்தோறும் உயிர்க்கு இனிமையும், உய்வும் அளிக்கும். கல்லைப் பிசைந்து கனியாக்கும் கனிவுடையது திருவாசகம். அரிய பொருளைப் பெண்களின் எளியவிளையாட்டு வகையால் அறிவுறுத்திய பெருமை திருவாசகத்திற்கே உண்டு. திருவுந்தியார், திருவெம்பாவை, திருச்சாழல், திருவம்மானை, திருப்பொன்னூஞ்சல், முதலிய திருப்பதிகங்கள் விளையாட்டு வகையால் நோக்குவார்க்கு விளையாட்டுமாய், ஞானத்திறத்ததாய் நோக்குவார்க்கு ஞானக் கருவூலமாய் விளங்குகின்றன. சன்மார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெறியில் அடிகள் நின்றவர் என்பதற்கேற்பத் திருக்கோவையார் அமைந்து விளங்குகின்றது. முன்னும் பின்னும் அடைமொழியோடு கூடி விளங்கும் இவ் அருமை நூல் உள்ளுந்தோறும் உயிரை மகிழ்விப்பதாகும்.

சமயகுரவர் நால்வராலும் அருளிச் செய்யப்பட்ட எட்டுத் திருமுறைகளைப் போன்றே ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பா, திருப்பல்லாண்டும், பத்தாம் திருமுறையாகிய திருமந்திரமும், இறைவன் முதலியவர்களால் அருளிச்செய்யப்பெற்ற பதினொராம்திருமுறையாகிய திருப்பாடல்களும், சேக்கிழார் அருளிய பன்னிரண்டாம் திருமுறையாகிய பெரியபுராணமும், சைவ நன்மக்களுக்கு வாய்த்த அரிய கருவூலமாகும். இத்திருமுறைகளின் காலம் ஏறத்தாழ கி. பி. 2முதல் கி. பி. 12ம் நூற்றுண்டு வரையாகும்.

இவற்றின் பிழிவாக எழுந்ததே ஞான நூல்கள் எனப்பெறும் சாத்திர நூல்களாகும். இத்தகைய ஞான நூல்கள் உயிர் (பசு) இறை (பதி) தளை (பாசம்) என்னும் முப்பொருளுண்மையைக் கூறுவதாகும், இவ்வுண்மையை அளவைகளாலும், பொருந்துமாற்றுலும் தெளிய விளக்க வந்தனவே இஞ்ஞான நூல்களாகும். இம்மூன்றையும், பழந்தமிழ் நூல்கள் ஒருங்கு எண்ண வில்லையெனினும் இவற்றைப் பற்றிய குறிப்புகள் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன என்பதும் ஈண்டு அறியத் தக்கது.

இலக்கண நூல்களில் இன்று முழுமையாகக் காணும் அளவிற்கு இருக்கும் தொன்மையான நூல் தொல்காப்பியமேயாகும். இதில் கடவுள், தெய்வம், கந்தழி ஆகிய சொற்களால் இறை உண்மையும், 'பாங்கரும் சிறப்பின் பல்வாற்ருனும் நில்லா உலகம் புல்லிய நெறித்தே', 'நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம் ஆதலின்' என்பன போன்ற நூற்பாக்களால் உயிருண்மையும், வினை, பால்வரை தெய்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஒன்றே வேறே என்றிருபால் வயின்' என்பனவாகிய தொடர்களால் வினையுண்மையும் குறிக்கப் பெற்றுள்ளன. 'தீதும் நன்றும் பிறர் தரவாரா', 'நீல மணிமிடற்று ஒருவன் போல மன்னுகபெரும நீயே' என்பன போன்ற சங்கச் செய்யுட்களும், இம்முப்பொருள் உண்மைகளைக்கூறிச் செல்கின்றன.

திருக்குறளிலோ, இம் முப்பொருள் உண்மைகள், பல்வேறு இடங்களில் கூறப்பெற்றுள்ளன. இந்நூலில் முப்பொருள் உண்மைபற்றிக் கூறப்படுவனவற்றை ஆராயின் தனி நூலாகவே விரியுமாதலின் முப்பால்களிலும், பாலுக்கு ஒன்றாக ஒவ்வொரு குறளைக் குறித்தல் தகும். "இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன் பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு", "ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்புடைத்து", "இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனுக் கண்ணிறை நீர் கொண்டனள்" என்ற மூன்று குறள்களிலும், இறை உண்மையும், உயிர் உண்மையும், தளையுண்மையும் விளங்குவதோடு அமையாது உயிர் வினை வயத்தால் பல பிறவி எடுக்கும் என்பதும், அப் பிறவிப் பெருங்கடலினின்றும் நீந்திக் கரைகாண வேண்டுமேல், இறைவன் பொருள் சேர் புகழ் புரிதல் ஒன்றுமே வாயிலாகும் என்பதும் தெளிவாக விளங்குகின்றதன்றே.

இவ்வாறு, ஆங்காங்கு பேசப்பெற்ற முப்பொருள் உண்மையை முதல் முதலாகத் தொகுத்துச் சுட்டியது திருமூலர் அருளிய திருமந்திரமேயாகும். "பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில் பதியினைப்போல் பசு பாசம் அனாதி" என்னும் திருமூலர் திருமந்திரமே பிற்காலத்து ஞானநூல்கள் விரித்துக் கூறியவற்றிற்குத் தோற்றுவாயாகும்.

ஞான நூல்களைப் பதினான்கு என்ற எண்ணிக்கையில் அடக்கல் மரபு. இந்நூல்களுக்கு முன்னர் ஞானாமிர்தமும், பின்னர் பண்டார சாத்திரங்களும் தோன்றியிருப்பினும் கி.பி. 12 முதல் கி.பி. 14ம் நூற்றாண்டு வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உபதேச பரம்பரையாகத் தோன்றிய நூல்களே மெய்கண்ட சாத்திரம் எனக் கூறப்படும். அவை திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, சிவப்பிரகாசம், திருவருட்பயன், கொடிக்கவி, விஞவெண்பா, உண்மை நெறி விளக்கம், நெஞ்சுவிடுதூது, போற்றிப்பஃறொடை, சங்கற்ப நிராகரணம், உண்மை விளக்கம் என்பன. முன்னைய இரண்டும் உய்ய வந்த தேவநாயனுர் என்னும் பெயருடைய இருவராற் செய்யப் பெற்றன.

இவர்கள் மெய்கண்டார்காலத்திற்கு முந்தியவராவர். எஞ்சிய 12 நூல்களுள் உண்மை விளக்கம் தவிர 11 நூல்களையும் செய்தவர்கள் மூவராவர். சிவஞானபோதத்தை மெய்கண்டாரும், சித்தியார், இருபா இருபஃது ஆகிய இரு நூல்களையும் அருணந்தி சிவாச்சாரியாரும் செய்தருளினர். எஞ்சிய 8 நூல்களையும் உமாபதி சிவாச்சாரியர் செய்தருளினர். உண்மை விளக்கத்தை மெய்கண்டாரின் மாணவராகிய திருவதிகை மனவாசகங் கடந்தார் அருளினுர். இவற்றுள் மெய்கண்டார் அருளிய சிவஞான போதமே மேலெல்லையாகக் கொண்டு உணரக் கூடியதாகும். அத்துவிதம் என்னும் சொல்லிற்கு இவர் கண்ட பொருளே பொருள் எனப் பின் வந்த தாயுமானுர் போற்றிப் பாராட்டுவர்.

''பொய்கண்டார் காணுப் புனிதமெனும் அத்துவித மெய்கண்ட நாதனருள் மேவு நாள் எந்நாளோ'' என்பது அவரின் பாராட்டுரையாகும். இதற்கு வழி நூலாக எழுந்ததே சிவஞான சித்தியாராகும். சிவஞான போதத்தை விளக்குவதற்குச் செய்யுள் வடிவில் வந்த உரை இது என எண்ணல் தகும்.

'சிவத்திற்குமேல் தெய்வம் இல்லை, சித்திக்கு மேல் நூல் இல்லை' என்னும் பழமொழியும், 'பார்விரித்த நூலெல்லாம் பார்த்தறியில் சித்தியிலே ஓர் விருத்தப் பாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும்'' என்னும் சிவபோகசாரப் பாடலும் இதன் பெருமையை விளக்கும். உமாபதி சிவம் அருளிய 8 நூல்களுள் திருவருட் பயன் திருக்குறள் போன்று குறள் வெண்பாவால் ஆயது. ஞானநூல்களைக் கற்க வேண்டும் என்பார் இதனையே முதற்கண் கற்றல் மரபு. ''பாற்கலன் மேல் பூனை'' ''உற்கை தரும் பொற்கை'' என்பனபோன்ற எளிய உவமைகளால் அரிய பொருள்களை இந்நூல் விளக்கும். வினாவெண்பா என்பது வினாக்களை மட்டுமே அடுக்கிக்கூறி விடைகளை உய்த்துணருமாறு செய்துள்ளது. நெஞ்சுவிடு தூது இலக்கிய நயம் சான்றது. சங்கற்ப நிராகரணம் சிவஞான சித்தியாரின் பரபக்கத்தோடு ஒப்ப எண்ணி மகிழ்தற்குரியது. நமக்குரிய சைவ சித்தாந்தச் செந்நெறியை முழுமையாக உணர்தற்கு இவற்றினுங்கு அறிய வேறுதுணையில்லை திவ்வியம் பழுத்த சைவ சித்தாந்தம் என்றும், ராஜாங்க சமயம் என்றும் போற்றிக்கூறப் பெறும் நம் சைவ சித்தாந்தச் செந்நெறி போற்றிப் பாராட்டற்குரியது.

புராணங்கள் என்பன பழைய வரலாற்றைக் கூறுவனவாகும். இவையும் முப்பொருள் உண்மையைக் கூறுவனவேயாயினும், ஞான நூல்கள் கூறுமாறு போல, தத்துவக்கூறுகளை மட்டுமே, கூறிபிருப்பன அல்ல. இறை உண்மை பற்றி நிற்போருக்கு வினை நீங்குமாற்றையும் அத்திறம் பற்றி நில்லாதோருக்கு, வினைப்பயன் தொடருமாற்றையும் வரலாற்று வடிவிற் காட்டவந்தனவே இப் புராணங்களாகும். இவற்றுள் சைவ நன்மக்களால் வழக்காற்றில் பெரிதும் பயிலப் பெறுவன பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், கந்தபுராணம் ஆகிய மூன்றுமாகும். இவற்றை இறைவனின் முக்கண்கள் எனக் கூறிப் போற்றுவர்.

இறைவனின் வலது கண்ணைக் கதிரவனாகவும், இடது கண்ணைத் தண்மதியாகவும், நெற்றிக் கண்ணைத் தீக்கடவுளாகவும் கூறுவர். இறைவன் உயிர்க்குயிராய் நின்று உள்ளொளியைத் தருதல்போல, புறவொளியைத் தருதற்கும், அவனே காரணமாயிருப்பன் என்பது குறிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அருக்கனிற் சோதி யமைத்தோன் திருத்தகு
மதியிற் றண்மை வைத்தோன் திண்டிறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலி னூக்கங் கண்டோ னிழல்திகழ்
நீரி லின்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணிற் றிண்மை வைத்தோ னென்றென்
றெனைப்பல கோடி யெனைப்பல பிறவும்
அனைத்தனைத் தவ்வயி னடைத்தோ"

எனவரும் திருவாசகப் பகுதியும் ஈண்டு நினைவு கூர்தற்தரியது. தமர நீர்ப்புவனம் முழுதும் ஒருங்கு ஈன்றுள் தடாதகா தேவியென்று ஒரு பெயர் தரித்தும், தனி முதல்வனுகிய சிவபெருமான் சவுந்தரமாறன் எனப்பெயர் தரித்தும், குமரவேள் வழுதி உக்கிரன் எனப் பெயர் தரித்தும், பாண்டிய மரபிலே தோன்றி அரசாட்சி செலுத்தி அப்பாண்டி நாட்டைச் சிவலோகமாக்குவித்த அருள் விளையாடல்களைக் கூறுவதே திருவிளையாடற் புராணமாகும்.

பாண்டியர் சந்திர மரபினர். எனவே இம்மரபில் நின்று அருளிய அருள்விளையாடல்களைக் கூறும் திருவிளையாடற் புராணத்தை இறைவனின் இடதுகண் என்பர். வீடும் வேண்டா விறலின் விளங்கும் திருத்தொண்டரின் பெருமை கூறும் பெரிய புராணம், கதிரவன் புறவொளியை நீக்குதற்போல் மாந்தர்தம் சிந்தையுள் சார்ந்து நின்ற அக இருளை நீக்குதல் பற்றி இம்மாக்கதையை இறைவனின் வலது கண்ணுகிய கதிரவன் என்பர். இறைவனின் நெற்றிக் கண்ணிலே தோன்றிய முருகப்பெருமானின் வரலாற்றைக் கூறும் கந்த புராணத்தை இறைவனின் நெற்றிக்கண் என்பர். இத்தகைய சீரிய புராணங்கள் மூன்றையும் சைவ நன்மக்கள் வழிவழியாக ஓதி வளம்பெற்று வரல் கண்கூடு.

"வாழ்வெனும் மையல் விட்டு வறுமையாம் சிறுமை தப்பித் தாழ்வெனும் தன்மையோடு சைவமாம் சமயம் சார்தற்கு" இம்மூவகையான ஞான நூல்களுமே பெருந் துணையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைச்செல்வம்

ஆசிரியர்:

நா. முத்தையா

விலை: ரூபா. 7-50

வெளிவந்துவிட்டது!

# ஆத்மஜோதி

30வது ஆண்டுச்

# சிறப்பு மலர்

பல அறிஞர்களின் கருத்தோவியங்களை உள்ளடக்கியது.

விலை: ரூபா. 10-00

கிடைக்குமிடம்:

ஆத்மஜோதி நிலையம்

நாவலப்பிட்டி.

(இலங்கை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேன் துளிகள்

பழம் நல்ல மதுரமாக இருக்கின்றது. இந்த மதுரம் வருவதற்கு முன்பு எப்படி இருந்தது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், பிறகு மதுரமாகவும் இருக்கிறது. மதுரம் என்பதுதான் சாந்தம். சாந்தம் வந்தால் எல்லாப்பற்றும் போய் விடுகிறது. உடனே கீழே விழுந்துவிடுகிறது. அதுபோல் இருதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்துவிட்டால் தானுகவே எல்லாப் பற்றும் போய்விடும்.

—ஆர். ஐயாச்கண்ணு

வெறும் பணத்தை மாத்திரம் கொடுத்துக் கொண்டு அந்தப் பணத்தை நாம் எப்படி துர்விநியோகம் செய்து வந்தாலும் ஏன் என்று கேட்காமல் இருந்தால் அவன் பிரபு அல்ல. நாம் பண்ணுகிற தப்புக்காக நம்மை எப்போது பார்த்தாலும் கடிந்துக் கொண்டும், தண்டித்துக் கொண்டும் நமக்கு உதவி செய்யாமல் இருக்கிறவனும் பிரபு அல்ல. நம்மை ரட்சிக்கவும் வேண்டும். சிட்சிக்கவும் வேண்டும். அப்படிப்பட்டவனே பிரபு. இப்படிப் பார்த்தால் ஈசுவரன்தான் பிரபு

—பத்மா ராமமூர்த்தி

நல்ல பேச்சு, நல்ல சிந்தனை, நல்ல செய்கை என்ற மூன்று மந்திரச் சொற்கள் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் இடம்பெற்று விட்டதானுல் இந்த உலகம் பேரானந்த சித்தி பெற்றதாக ஆகிவிடும்

—கோபி சிவம்

கருமத்தில் கண்ணுயிருப்பவர்கள்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும். ஒரு நிமிடம் ஓய்வு எடுத்துக்கொள்பவர்கள்கூட, சுழன்று கொண்டேயிருக்கும் காலச் சக்கரத்தில் அகப்பட்டு நசுங்கி விடுவார்கள். தன்னை எரித்துக்கொண்டு ஒளியூட்டி வழிகாட்டும் தீபத்தைப் போல் நாம் வாழவேண்டும்.

—முகம்மது இக்பால்

ஒரு தேசத்தின் பண்புக்கு இதயமாக அல்லது உரைகல்லாக இருப்பது அந்த நாட்டு மகாகவியின் வாக்குத்தான்.

—செல்வ சுப்ரமண்யம்

குழந்தையாக இருக்கிறபோது எல்லாரிடத்திலும் பிரியம் அதிகம். பெரியவர்களானதும்தான் சண்டை—சச்சரவு எல்லாம் செய்ய ஆரம்பித்து விடுகிறோம். நாம் குழந்தையாகவே இருக்கக்கூடாதா என்று இப்பொழுது தோன்றுகிறது—

—ஏ. சண்முகம்

ஒரு துணியை வெள்ளத்தில் போட்டால் அது தானே விரிந்து தண்ணீரை இழுத்துக் கொள்கிறது. துணியை வெளியே இழுத்துப் பிழிந்தால் நீர் கொட்டுகிறது. கல்மனசைப் பரோபகாரத்தினுல் இப்படி லேசாகத் துணி மாதிரி ஆக்கிக் கொண்டால் எப்போதும் நம்மைச் சூழ்ந்திருக்கிற ஈசுவர அநுக்கிரகத்தை நன்ருக உறிஞ்சிக் கொள்ளலாம்.

—கார்த்திக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered at the G.P.O. as a Newspaper M. L 339/00.

# சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்,

அன்பு வணக்கம்

தங்கள் கைகளில் கிடைக்கும் இந்தச் சுடர் 30ஆவது ஆண்டு இரண்டாவது சுடராகும். கடந்த 29 ஆண்டு களாகச் சோதிக்குக் கிடைத்த அன்பர்களின் ஆதரவு எதிர்காலத்திலும் கிடைக்கும் என்ற நம்பிக்கை உண்டு. ஒவ்வொரு அன்பர் இல்லத்திலும் ஜோதி சுடர்விட்டுப் பிரகாசிக்க வேண்டும் என்பதே எமது தலையாய குறிக் கோள். ஒவ்வொரு சந்தா நேயரும் தத்தம் புதிய ஆண்டுச் சந்தா 10 ரூபாவை அனுப்பி வைப்பதோடு ஒவ்வொரு புதிய அங்கத்தவரை அறிமுகம் செய்து வைத்தால் சோதியின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

1978 ஜனவரி முதல் வெளிநாட்டுத் தபாற் கட்டணங்கள் அதிகரிக் கப்பட்டதை முன்னிட்டு இலங்கை தவிர்ந்த வெளிநாடுகளுக்கு ஆத்மஜோதியின் வருடச்சந்தா ரூபா 20/- ஆக அதிகரிக்கப்பட்டிருப் பதைச் சந்தா நேயர்கள் கவனிக்கும்படி வேண்டுகிறோம்.

விலாச மாற்றம் செய்வோர் புதிய பழைய விலாசங்கள் இரண்டை யும் குறிப்பிட்டால்தான் விலாச மாற்றம் செய்ய இலகுவாக இருக்கும். ஒரே பெயரில் பலர் இருக்கிறார்கள். அதற்காகத்தான் இதனைக் குறிப்பிடுகின்றோம்.

இங்ஙனம்.

ஆத்மஜோதி நிலையத்தினர்

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
ஸ்ரீலங்கா
16-12-77.

அச்சிடுவிப்போர்:- ஆத்ம ஜோதி நிலையம்
அச்சிடுவோர்:- ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி: 16-12-77.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org